# அன்பு பகிர்வு இயக்கம்

# செய்தி மலர்

| | |
|---|---|
| தனிப்பிரதி | ₹. 10/- |
| ஆண்டுச் சந்தா | ₹. 100/- |
| ஆயுள் சந்தா | ₹. 1000/- |

மலர் : 12 இதழ் : 12 அக்டோபர் 2016


பீல் ஆதிவாசி மக்கள் தரிசன பணியில்

## சுவிசேஷ விஷயத்தில் என்னோடே கூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவ புஸ்தகத்தில் இருக்கிறது

பிலிப்பியர்.4:3




ஆசிரியர்:

பேராயர் வே. தேவதாஸ்

# கிறிஸ்மஸ் நாட்களில் பீல் மக்களை நினைப்போம்



நமக்காய் பூமியிலே பாலகனாய் பிறந்து, அற்புதங்களையும் அதிசயங்களையும் இந்த பூமியிலே செய்து, பாடுபட்டு, சிலுவையிலே மரித்து, அடக்கம்பண்ணப்பட்டு, மூன்றாம் நாளிலே உயிர்த்தெழுந்த ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறந்த நாளை நாம் கொண்டாடுவதே கிறிஸ்மஸ் தினமாகும்.

வருடந்தோறும் கிறிஸ்மஸ் காலங்களில் நம்முடைய சுதேச ஊழியர்களுக்கும் அவர்கள் மனைவிமார்களுக்கும், அவர்கள் பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் கொடுத்து, அவர்களும் கிறிஸ்மஸ்-ஐ மகிழ்ச்சியாய் கொண்டாட உதவி செய்ய தேவன் நமக்குத் தந்த கிருபைக்காக அவரைத் துதிப்போம். அதே போல் நம்முடைய பள்ளி மற்றும் விடுதியில் படித்துவரும் நம் ஆதிவாசி மாணவ, மாணவிகளுக்கும், சிறு பிள்ளைகளுக்கும் புத்தாடைகள் மற்றும் வெகுமதிகளை கிறிஸ்துமஸ் தினங்களில் கொடுத்து வருகிறோம்.

அதே போல் இந்த ஆண்டும் இந்த காரியங்களுக்காக சுமார் ரூ.15 லட்சங்கள் வரை தேவையுள்ளது. ஆகவே கர்த்தர் உங்கள் உள்ளத்தில் ஏவினால் ஒரு ஊழியரின் குடும்பத்திற்கு குறைந்தது ரூ. 1500/- அல்லது அதற்கு மேலாகவோ, ஒரு ஆதிவாசி பிள்ளைக்கு குறைந்தது ரூ. 500/- அல்லது அதற்கு மேலாகவோ, கிறிஸ்மஸ் வெகுமதியாகக் கொடுத்து உதவ அன்பாய் அழைக்கிறோம்.

இந்த வெகுமதி காணிக்கைகளை நவம்பர் மாதத்திற்குள்ளேயே அனுப்பினால் சுதேச ஊழியர்கள் குடும்பத்திற்கும், ஆதிவாசி பிள்ளைகளுக்கும் அன்பளிப்புகளை கிறிஸ்மஸ்க்கு முன்பாக கொடுக்க உதவியாக இருக்கும்.

நீங்கள் கொடுக்க விரும்பும் காணிக்கைகளை நேரடியாக தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கலாம். அல்லது எங்கள் ஷாலோம் பிரதிநிதிகளிடம் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளலாம்.



**இந்த பீல் மக்களின்**
**சந்தோஷத்தோடு**
**கிறிஸ்மஸ்-ஐ வரவேற்போம்!**
**தேவ ஆசீர்வாதத்தைப்**
**பெற்றுக் கொள்வோம்!!**



## உங்கள் சகோதரனிடமிருந்து...

*கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களுக்கு,*

இயேசு கிறிஸ்துவின் இனிய நாமத்தில் வாழ்த்துக்களை ஷாலோம் பணித்தள அலுவலகத்திலிருந்து தெரிவிக்கிறேன். தேவனுடைய கிருபையினாலும், உங்கள் யாவரின் ஜெபங்களினாலும், ஆதரவுகளினாலும் ஷாலோம் ஊழியங்கள் வளர்ந்துவருகிறது.தேவனுக்கே மகிமை உண்டாவதாக

ஷாலோம் ஊழிய வெள்ளி விழா ஆண்டு சிறப்பு திட்டங்களான 1000 சுதேச ஊழியர்கள், 1000 சபைகள், 500 கிராம ஆலயங்கள், 1 இலட்ச பீல் ஆதிவாசி குடும்பங்களை தேவனண்டை நடத்தும்படியாக ஆவியானவரின் பெலத்தோடு ஊழியர்களை நடப்பித்து வருகிறோம்.

முதலாவது ஆகஸ்ட்மாதத்தில் 600 பீல் சுதேச ஊழியர்களில் 250 மூத்த சுதேச ஊழியர் குடும்பங்களை அழைத்து 3 நாட்கள் இரண்டு முகாம்களாக ஷாலோம் தரிசன தலைவர்கள் முகாம் என்று நடத்த தேவன் கிருபை தந்தார். அதன் விளைவாக சுமார் 3 மாநிலத்திலுள்ள பணித்தளங்களை 50 பிராந்தியங்களாக பிரித்து தங்கள் தங்கள் பிராந்தியங்களில் உள்ள அனைத்து கிராமங்களையும் குறிப்பாக 2020ம் ஆண்டிற்குள் 3000 கிராமங்களில் சபைகளை, ஊழியர்களை எழுப்ப தீவிரமாக அர்ப்பணித்துள்ளார்கள்.

நானும், என் மனைவி வஹிதாவும் பீல் மக்கள் மொழியில் 25 வருட ஊழியப்பாதையில் தேவன் செய்த நன்மைகளை, காரியங்களை DVD மூலமாக குறிப்பாக நான் வெள்ளி விழா திட்டங்களை 1000 சுதேச ஊழியர்கள், 1 இலட்ச விசுவாசி குடும்பங்கள், மற்றும் தரிசன பணிக்காக கொடுக்க வேண்டும். ஜெபிக்க வேண்டும் என்பதை பகிர்ந்து கொண்டோம் அதை நம்மிடத்தில் உள்ள 7 LCD Projector மூலமாக அந்தந்த பகுதியில் உள்ள ஆலயங்களில் திரையிட்டபோது 25000 குடும்பங்களும் தங்களை ஜெபிக்க,உழைக்க, ஆத்துமாக்களை ஆதாயம் செய்ய, ஷாலோம் மிஷனெரி பணிக்காக கொடுக்க தங்களை அர்ப்பணித்ததை கண்டு தேவனைத் துதித்தோம்.

3 மாநிலங்களிலும் தேவ கிருபையினால் கடந்த ஆகஸ்ட் செப்டம்பர் மாதங்களில் நடைபெற்ற வாலிபர்கள் கூடுகையில் வாலிப ஆண்கள், பெண்கள் திரளாக இரட்சிக்கப்பட்டு, பாவம், சாபம், நோய்கள், பிசாசின் பிடியினின்று விடுவிக்கப்பட்டு பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றார்கள். சகோதரி. வஹிதா தேவதாஸ் தலைமையில் இந்த முகாம்கள் மிக ஆசீர்வாதமாக அமைந்தது.

ஷாலோம் அற்புதத்தின் நாள் 23.09.2016 வெள்ளிக்கிழமை

சில வருடங்களுக்கு முன்பாக எதிர்ப்புகள் அதிகமாக இருந்த நாட்களில் சகோ. மோகன்.சி.லாசரஸ் அவர்கள் மூலமாக சுகமளிக்கும் அற்புத கூட்டங்கள் நடத்த முடியவில்லை. அந்த வருடம் தேவன் அனைத்து சுதேச ஊழியர்களுக்கும் ஜெப எண்ணெயை ஜெபித்து கொடுத்து செப்டம்பர் 4 ஆம் வெள்ளியன்று ஷாலோம் அற்புதநாளாக ஆசரிக்க கிருபை செய்தார். அந்நாளில் சபையாக உபவாசித்து, ஜெபித்து, விசுவாசிகள் புதிய குடும்பங்களை ஜெபத்திற்காக, விடுதலைக்காக அழைத்து வருவார்கள். அப்படியாக அந்த நாளில் குறைந்தது 4000 முதல்

5000 அற்புதங்கள் நடைபெற்று வருகிறது. குறைந்தது 1000 குடும்பங்கள் புதிதாக இயேசுவை ஏற்றுக்கொள்வார்கள். தேவனுக்கே மகிமை உண்டாவதாக. இந்த வருடம் 23.09.2016 வெள்ளிக்கிழமை அன்று 600 சுதேச ஊழியர்களும் தங்களுக்கு தேவன் கொடுத்த 700 சபைகளில் அற்புதத்தின் நாளை ஆசரித்தார்கள். நூற்றுக்கணக்கான அற்புதங்கள் சபைகள் தோறும் தேவன் நடத்தினார். பல நூறு குடும்பங்கள் இயேசுவை புதிதாக ஏற்றுக்கொண்டார்கள். விபரங்களை அடுத்த மலரில் வெளியிடுகிறோம்.

**ஷாலோம் மிஷன் ஞாயிறு**

தேவ கிருபையால் ஒவ்வொரு வருடமும் ஷாலோம் சபையில் விசுவாசிகள் யாவரும் இணைந்து பேராயர் தேவதாஸ் குடும்பத்திற்கு தேவன்தந்த தரிசனப் பணிக்காக துதி செலுத்தி காணிக்கை கொடுத்து தரிசனப்பணி நிறைவேற தங்களையும் அர்ப்பணிப்பார்கள். கடந்த ஆண்டில் சபையார் யாவரும் இணைந்து ஷாலோம் மிஷனெரி பணிக்காக ரூ. 31 இலட்சம் உற்சாகமாக கொடுத்தார்கள். இந்த வருடம் LCD Projector மூலமாக பணியின் வளர்ச்சியையும், எங்கள் அர்ப்பணிப்பையும் ஏற்றுக்கொண்டு அதிகமாக ஜெபிக்க, ஆத்தும ஆதாயம் செய்ய குடும்பமாக இணைந்து 50 இலட்சங்கள் சேகரித்துக்கொடுக்க தீர்மானித்துள்ளார்கள்.

25.09.2016 அன்று மத்தியப்பிதேசத்தில் ஷாலோம் மிஷன் ஞாயிறு நிறைவடைந்துள்ளது. வரும் 02.10.2016 அன்று ஞாயிற்றுக்கிழமையில் குஜராத் மாநிலத்தில் ஷாலோம் மிஷன் ஞாயிறு மற்றும் 09.10.2016 அன்று ஞாயிற்றுக் கிழமை இராஜஸ்தானில் ஷாலோம் மிஷன் ஞாயிறு ஆசரிக்க திட்டமிட்டு ஒழுங்கு செய்துள்ளோம். அதைத் தொடர்ந்து அடுத்த நாளில் நடைபெறும் பீல் சுதேச ஊழியர்களின் கூடுகைக்காக ஜெபியுங்கள். தேவன் தாமே அந்நாட்களில் பாதுகாவலை கட்டளையிடவும், ஒருமனதின் ஆவியையும், தேவ பயத்தையும் கொடுக்குமாறு ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

**பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப கூடுகை** ஒவ்வொரு வருடமும் நாம் அனைத்து பீல் சுதேச ஊழியர்கள் குடும்ப கூடுகையை 3 நாட்கள் நடத்தி வருகிறோம். இந்த வருடம் வெள்ளி விழா ஆண்டு சிறப்பு சுதேச ஊழியர் குடும்ப முகாமாக ஆசரிக்க அக்டோபர் 18 முதல் 21 வரை குஜராத் பரூச் நகரில் உள்ள Spiritual Life Centreல் நிறைவேற்ற தீர்மானித்துள்ளோம். அதற்காக பாரத்துடன் ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

இக்கூடுகையில் பங்கு பெற உள்ள 600 சுதேச ஊழியர் குடும்பங்கள் மற்றும் 100 புதிய சுதேச ஊழியர் குடும்பங்கள் மற்றும் 400 ஓய்வு நாள் பாடசாலை ஆசிரியர்கள், பணித்தள அலுவலக மற்றும் Project ஊழியர்கள் 100 குடும்பங்களாக கூட இருக்கிறார்கள். தங்கும் வசதி, உணவு வசதி, நல்ல பாதுகாப்பான சீதோஷ்ண சூழ்நிலையை தரும்படியாக ஜெபியுங்கள். இந்த கூடுகையில் 21.10.2016 அன்று 150 ஷாலோம் சுதேச ஊழியர்கள் போதகர்களாக பிரதிஷ்டை செய்யப்பட இருக்கிறார்கள். அவர்களுக்கான சிறப்பு பயிற்சி மற்றும் அதற்கான Documents ஆயத்தங்கள் நடைபெற்று வருகிறது. கருத்தாக இதற்காக ஜெபியுங்கள். 20.10.16 அன்று மாலை வெள்ளி விழா ஆண்டு சிறப்பு கூடுகை நிகழ்ச்சி நடைபெற உள்ளது. வட இந்தியாவிலும், தென்னிந்தியாவிலும் இருந்து சிறப்பு விருந்தினார்கள் பங்கு பெறுகிறார்கள். சிறப்பு நிகழ்ச்சிகளை ஒழுங்கு செய்து வருகிறோம் ஜெபியுங்கள். இந்த முகாமில் சகோ. *மோகன்.சி.லாசரஸ்* (இயேசு விடுவிக்கிறார் நாலுமாவடி) அவர்கள் குழுவாகவும், பேராயர். தயானந்தம்

சென்னை அவர்களும் **Anglican Bishop Rt.Rev.***சத்திய குமார்* அவர்களும் பங்குப்பெறுகிறார்கள். இந்த கூட்டத்திற்கான செலவுக்குரிய நிதி உதவி கிடைக் கப்பெற ஜெபிக்கவும், தாங்கவும் வேண்டுகிறேன். குறிப்பாக 150 போதகர்களுக் கான சிறப்பு ஆடைகள், ஊழியக்காரிகளுக்கான சேலை மற்றும் ரூபாய் 800 மதிப் பில் வேதாகமம் கொடுக்க ஒரு ஊழியருக்கு ரூ.3000 வீதம் 150 போதகர்களுக்கு தேவை இந்த முகாமில் அனைத்து ஊழியர்களும் 2020க்குள் முழு பீல் மக்களும் இரட்சிக்கப்பட தரிசனங்களைப் பெற்று செயல் வீரர்களாய் கடந்து செல்ல ஜெபி யுங்கள்.

**ஷாலோம் வெள்ளி விழா திட்டங்கள் 2016-2017**

கர்த்தருக்குச் சித்தமானால் சகோ. மோகன் சி.லாசரஸ் அவர்கள் 22.10.16 முதல் 25.10.16 வரை பணித்தளத்திற்கு வருகை தருகிறார்கள்.அந்தநாட்களில் கீழ்க்கண்ட திட்டங்கள் நிகழ்ச்சிகள் நிறைவேற்றப்பட ஜெபியுங்கள்.

விசேஷமாக குஜராத்தில் தாகோத்தில் நம்முடைய பழைய அலுவலக கட் டிடத்தை இடித்து தேவன் தந்த புதிய திட்டமான ஷாலோம் பவன் (Shalom Bhavan) கட்டப்பட கர்த்தருக்குச் சித்தமானால் 22.10.2016 அன்று அடிக்கல் நாட் டப்பட உள்ளது.

மத்தியப்பிரதேசத்தில் அந்தர்வேலியாவில் வாங்கப்பட்டுள்ள 3 ஏக்கர் நிலத்தில் மத்தியப்பிரதேச ஷாலோம் பேராலயம் அலுவலகம் கட்டப்பட கர்த்த ருக்குச் சித்தமானால் 23.10.2016 அன்று அடிக்கல் நாட்டப்பட உள்ளது.

இராஜஸ்தானில் வாங்கப்பட்டுள்ள நிலத்தில் ஷாலோம் மிஷன் பள்ளிக் கூடம் மற்றும் 300 மாணவர்களுக்கான விடுதி கட்டிடங்களுக்கான அடிக்கல் கர்த் தருக்குச் சித்தமானால் 24.10.2016 அன்று நாட்டப்பட உள்ளது.

தேவகிருபையால் ஷாலோம் மிஷனெரி இல்லம் அங்கிகரிக்கப்பட்டு கட்டி முடிக்கப்படும் தருவாயில் உள்ளது. கர்த்தருக்குச் சித்தமானால் 22.10.2016 அன்று பிரதிஷ்டை செய்யப்பட ஜெபியுங்கள்.

மேலும் குஜராத்தில் கட்லா, போர்கேடா ஆலயங்களும் மத்தியப்பிரதே சத்தில் படிபாவடி, பல்வாண் கிராம ஆலயங்கள் பிரதிஷ்டை செய்யப்பட உள்ளது.

மத்திய்பிரதேசத்தில் ஷாலோம் திருமண்டலம் ஆரம்பிக்கப்படவும் முதல் பீல் உதவி பேராயர் பிரதிஷ்டை செய்யப்படவும் உள்ளார்கள். அதை தொடர்ந்து அனைத்து சபைகளின் மூப்பர்களின் கூடுகைக்காக ஜெபியுங்கள்.

இராஜஸ்தானில் கோய்காவில் நடைபெற உள்ள மூப்பர்கள் கூடுகையையும் சத்திரகூட்டாவில் நடைபெற உள்ள வாலிபர்கள் கூடுகைகளுக் காகவும் ஜெபிக்கவும். எல்லாவற்றையும் செய்து முடிக்க தேவன் எங்களுக்கு கிருபை தரும்படியாக ஜெபிக்கவும். குறிப்பாக 1 நாள் உபவாசித்து ஜெபிக்க அன்புடன் கேட்கிறேன்.

உங்கள் யாவருக்காகவும் நாங்கள் ஜெபிக்கின்றோம், எங்களுக்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்

தேவ அறுவடை பணியில் உங்கள் அன்பு சகோதரன்,

(பேராயர்.V. தேவதாஸ்)

என்னுடன் தொடர்பு கொள்ள
**09377445468**

# இயேசுவுக்காக! சுவிசேஷத்திற்காக....

சிறப்பு செய்தி : **சகோ. வே. தேவதாஸ்**

அதற்கு இயேசு பிரதியுத்திரமாக, "என்னிமித்தமாகவும், சுவிசேஷத்தினிமித்தமாகவு, வீட்டையாவது, சகோதரரையாவது, சகோதரிகளையாவது, தகப்பனையாவது, தாயையாவது, மனைவியையாவது, பிள்ளைகளையாவது, நிலங்களையாவது விட்டவன் எவனும், இப்பொழுது இம்மையிலே, துன்பங்களோடேகூட நூறத்தனையாக, வீடுகளையும், சகோதரரையும், சகோதரிகளையும், தாய்களையும், பிள்ளைகளையும், நிலங்களையும், மறுமையிலே நித்தியஜீவனையும் அடைவான்" என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். மாற்கு 10:29,30

கிறிஸ்துவுக்குள் மிக அன்பானவர்களே, நான் எப்பொழுதாவது நேரம் கிடைக்கும் வேளையில் குறிப்பாக இரவில் You tube -ல் கிறிஸ்தவ தமிழ் பாடல்களை பார்த்து மகிழ்வதுண்டு. அதில் சில பாடல்கள் மனதை கவருவது மட்டுமல்ல, ஆத்துமாவில் சந்தோஷமும் உண்டாகும். அதில் ஒரு பாடல் "என்ன கொடுப்பேன் நான் உமக்கு என்ன கொடுப்பேன்?" இந்தப் பாடல் ஒரு சிறுமி மிக அழகாக கருத்துடன் பாடியிருக்கிறாள். அவளுக்காகவும், ஊக்குவித்த பெற்றோருக்காகவும் தேவனை துதிக்கிறேன். அந்தப் பாடல் சிறியவர்கள் மட்டுமல்ல அனைத்து பெரியவர்களையும் கவர்ந்துள்ளது. குறிப்பாக என்னுடைய பேரன் Zion அந்தப் பாடலை கேட்டவுடன் அப்படியே சந்தோஷப்படுவான். அந்த வேளையில் தான் நன்றாக உணவும் சாப்பிடுவான். இந்த பாடலில் இயேசுவுக்காக நான் என்ன கொடுப்பேன்? என்று அனைவரையும் அர்ப்பணிக்க தூண்டுகிறது அல்லவா?

இந்த உலகில் மனுக்குலம் இரட்சிக்கப்படுவதற்காக பிதாவாகிய தேவன் சர்வ வல்லமையுள்ள யேகோவா கர்த்தர் தம் ஒரே பேரான குமாரனை இவ்வுலகத்திற்கு அனுப்பி இவ்வளவாய் அன்பு கூர்ந்தார். தேவ குமாரனாகிய இயேசு கிறிஸ்து உலகில் அவதரித்து ஊழியங்களை நிறைவேற்றிய போது அநேக சிறியவர், பெரியவர், ஆண்கள், பெண்கள் இயேசுவுக்கு உதவியாக; சுவிசேஷத்திற்கு உதவியாக, அவருக்கு உதவியாக பல நன்மையான காரியங்களை அவர்களுக்கு கிடைத்த கிருபையின்படி செய்தார்கள். அவைகளை நான் வாசித்து தியானித்த போது உண்மையாக என் இதயம் இயேசுவுக்காக முழுமையாக அர்ப்பணிக்க வைத்தது. அவற்றில் சிலவற்றை நாம் தியானிப்போம்.

**இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு இடம் கொடுத்த சத்திரக்காரன் :**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பெற்றோர் யோசேப்பும், மரியாளும் பெத்லகேமிற்கு குடிமதிப்பெழுத சென்ற போது பெத்லகேமில் பிரசவகாலம் நேரிட்டது. அந்த வேளையில் அங்கு இடம் ஏதும் கிடைக்கவில்லை. சத்திரக்காரன் சத்திரத்தில் இடம் இல்லாதபடியால் தன்னிடத்தில் இருந்த "முன்னணை" பகுதியை கொடுத்தான். இன்றும் இயேசுகிறிஸ்துவின் பிறப்பை சித்தரிக்கும் போது அந்த ஏழ்மையான கோலத்தை பார்க்கிறோம். ஒருவேளை 33 வருடங்களுக்கு பின்பு அந்த சத்திரக்காரன் என்ன

நினைத்திருப்பான்? ஐயோ இயேசு கிறிஸ்து பிறப்பதற்கு என் சத்திரத்தில் இடம் கொடுக்காமல் விட்டு விட்டேனே? என்று வருந்தியிருப்பான். இயேசுவுக்காக அநேக வேளையில் நாம் good, அல்லது better- ஐ கொடுக்க முன் வருகிறோம். ஆனால் the best -ஐ கொடுக்கும் போது எவ்வளவு சந்தோஷமாக இருக்கும். ஆனாலும் அந்த சத்திரக்காரன் என்னுடைய இடத்தில் இயேசு கிறிஸ்து பிறக்கும் பாக்கியம் கிடைத்தது என்று மகிழ்ந்திருப்பான். இன்றும் இயேசு கிறிஸ்து பிறந்த பெத்லகேமில் கிழக்கில் வந்த சாஸ்திரிகள் மட்டுமல்ல, உலகமெங்கும் ஜனங்கள் வந்து கண்டு தேவனை மகிமைப் படுத்தினார்கள்.

***சுவிசேஷ பணிக்காக இயேசுவுக்கு கிடைத்த படகு :***

லூக்கா 5ம் அதிகாரத்தில் 1-11 வரை வாசித்து பாருங்கள். கெனெசரேத்து கடலருகே இயேசு கிறிஸ்து ஊழியம் செய்வதற்கு, அமர்ந்து பிரசங்கம் செய்வதற்கு காலியான படகு ஒன்றை சீமோன் பேதுருவிடம் கேட்டு வாங்கி ஊழியம் செய்தார். ஊழியத்தை முடித்த பின்பு ஊழியத்திற்கு உதவி செய்த சீமோன் பேதுருவின் காலியான படகிற்கு பதிலாக 2 படகுகள் அமிழத்தக்கதாக மீன்களை தந்து ஆசீர்வதித்தார். சுவிசேஷத்திற்காக நாம் நம்மிடத்தில் உள்ள எதை மனப்பூர்வமாக தருகிறோம்; கட்டாயம் அதை ஆண்டவர் பலமடங்காக ஆசீர்வதித்துக் கொடுப்பார்.

***ஆஸ்திகளால் ஊழியம் செய்த ஸ்திரிகள் :***

லூக். 8:1-3 ல் “பின்பு அவர் பட்டணங்கள் தோறும் கிராமங்கள் தோறும் பிரயாணம் பண்ணி, தேவனுடைய ராஜ்யத்திற்குரிய நற்செய்தியைக் கூறிப் பிரசங்கித்து வந்தார். பன்னிருவரும் அவருடனேகூட இருந்தார்கள். அவர் பொல்லாத ஆவிகளையும், வியாதிகளையும் நீக்கிக் குணமாக்கின சில ஸ்திரீகளும், ஏழு பிசாசுகள் நீங்கின மகதலேனாள் என்னப்பட்ட மரியாளும், ஏரோதின் காரியக்காரனான கூசாவின் மனைவியாகிய யோவன்னாளும், சூசன்னாளும், தங்கள் ஆஸ்திகளால் அவருக்கு ஊழியஞ்செய்து கொண்டு வந்த மற்ற அநேகம் ஸ்திரீகளும் அவருடனே இருந்தார்கள்.” கிராமங்கள், பட்டணங்கள் தோறும் இயேசு கிறிஸ்து 12 சீஷர்களுடன் ஊழியம் செய்தார், பிரசங்கித்தார். அநேகரை சுகமாக்கி பிசாசுகளை துரத்தி அற்புதங்களைச் செய்தார். அப்படிப்பட்ட ஊழியங்களை கிராமங்கள், பட்டணங்கள் தோறும் செய்வதற்கு தேவையான நிதி உதவிகளை இயேசு கேட்கவில்லை. அநேக ஸ்திரீகள் தங்கள் ஆஸ்திகளால் ஊழியம் செய்தார்கள், என வாசிக்கிறோம். தேவன் நமக்கு ஆஸ்திகளை தருவது எதற்காக? நாம் மட்டும் சந்தோஷமாக வாழ வேண்டும் என்பதற்காக அல்ல. தேவன் தந்த ஆஸ்திகள் மூலமாக தேவனுடைய ஊழியத்தை செய்த அந்த ஸ்திரீகள் போல சுவிசேஷப்பணி, ஆலயம் கட்டுதல், சபைகளை பராமரித்தல், ஏழைகளை விசாரித்தல் போன்ற ஊழியங்களை சபை மூலமாக நாம் நிறைவேற்றுவதற்குத்தான்.

***5 அப்பங்கள் 2 மீன்களை இயேசுவிடம் கொடுத்த பெயர் தெரியாத சிறுவன் :***

இயேசு கிறிஸ்து ஊழியம் செய்த நாட்களில் திரளான ஜனங்கள் வசனத்தைக் கேட்க, விடுதலை பெற, நோய்கள் சுகமாகும்படியாக அவரை தேடி வந்தார்கள். கிட்டத்தட்ட 5000 புருஷர்கள் கூட வந்த வேளையில் இயேசு கிறிஸ்து தாமே அவர்களை போஷிக்க விரும்பினார். ஒன்றுமில்லாத

வைகளிலிருந்த பலஅநேகங்களை உண்டாக்க வந்தார் இயேசு. ஆனால் அவர் உங்களிடத்தில் என்ன இருக்கிறது அது எனக்கு தேவை என்ற போது யோவான் 6ம் அதிகாரத்தில் 8, 9 வசனத்தை வாசித்து பாருங்கள். “இங்கே ஒரு பையன் இருக்கிறான், அவன் கையில் ஐந்து வாற்கோதுமை அப்பங்களும், இரண்டு மீன்களும் உண்டு, ஆனாலும் அவைகள் இத்தனை ஜனங்களுக்கு எம்மாத்திரம் என்றான்.” யோவான் 6:9 ,இயேசு கிறிஸ்து மிகப் பெரிய அற்புதம் செய்வதற்கு ஒரு சிறிய பையனுடைய அர்ப்பணிப்பு எவ்வளவு விலையேறப்பெற்றது. எனக்கு உண்மையில் மிகுந்த ஆசை என்னவெனில் பரலோகத்தில் சென்று அந்த பேர் தெரியாத சொல்லப் படாத சிறிய பையனை பார்த்து கைகுலுக்கி Praise the Lord சொல்ல வேண்டும். நம் பாரத தேசத்தில் திரளான ஆலயங்களுக்கு ஆவிக்குரிய உணவாகிய ஜீவ அப்பத்தை வழங்க வேண்டும். அந்த சிறு பையனைப் போல் கிறிஸ்துவின் சுவிசேஷத்திற்காக, தேவன் அற்புதங்களை நடப்பிப் பதற்கு நம்மை கொடுக்க ஆயத்தமா?

***கிறிஸ்து பவனி செல்வதற்கு தன்னுடைய கழுதையை கொடுத்த மனிதன் :***

லூக்கா 19:29-35 அவர் ஒலிவமலையென்னப்பட்ட மலையின் அருகான பெத்பகே பெத்தானியா என்னும் ஊர்களுக்குச் சமீபித்தபோது, தம்முடைய சீஷரில் இரண்டுபேரை நோக்கி:

உங்களுக்கு எதிரே இருக்கிற கிராமத்துக்குப் போங்கள், அதிலே பிரவேசிக்கும் போது மனுஷரிலொருவனும் ஒருக்காலும் ஏறியிராத கழுதைக்குட்டியைக் கட்டியிருக்கக் காண்பீர்கள்; அதை அவிழ்த்துக் கொண்டு வாருங்கள்.

அதை ஏன் அவிழ்க்கிறீர்களென்று யாராவது உங்களிடத்தில் கேட்டால், அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லுங்கள் என்றார்.

அனுப்பப்பட்டவர்கள் போய், தங்களுக்கு அவர் சொன்னபடியே கண்டார்கள்.

கழுதைக்குட்டியை அவர்கள் அவிழ்க்கும்போது, அதற்கு உடைய வர்கள்: குட்டியை ஏன் அவிழ்க்கிறீர்கள் என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்கள்: அது ஆண்டவருக்கு வேண்டுமென்று சொல்லி,

அதை இயேசுவினிடத்தில் கொண்டு வந்து, தங்கள் வஸ்திரங் களை அதின்மேல் போட்டு, இயேசுவை அதின்மேல் ஏற்றினார்கள். வேத வாக்கியங்கள் நிறைவேறும்படியாக எருசலேமுக்குள் கிறிஸ்து பவனியாக மறியின் மீது வருவார் என்ற வார்த்தையின் படி அவர் பவனி செல்வதற்கு பெத்பகே பெத்தானியா ஊர்களுக்கு சமீபமான இடத்தில் இயேசு சொன்ன கழுதையையும், கழுதை குட்டியையும் அதற்குரிய எஜமான் இயேசுவுக்கு வேண்டும் என்று சொன்னவுடன் அதைக் கொடுத்து அனுப்பினான். கிறிஸ்து இயேசு எருசலேமிற்குள் பாலகரின் துதி பாடலுடன் பிரவேசித்தார். இன்றும் நாம் கிறிஸ்துவின் நற்செய்தி பணியை அறிவிக்க, சுவிசேஷத்தை சுமந்து செல்லும் வாகனங்களை அனுப்பலாமே!

***பஸ்காவை ஆசரிக்க மேலறையை கொடுத்த மனிதன் :***

லூக்கா 22:7-13 பஸ்காவைப் பலியிட வேண்டிய புளிப்பில்லாத அப்பப்பண்டிகை நாள் வந்தது.

அப்பொழுது அவர் பேதுருவையும், யோவானையும் அழைத்து: நாம் பஸ்காவைப் புசிக்கும்படிக்கு நீங்கள் போய், அதை நமக்கு ஆயத்தம்

பண்ணுங்கள் என்றார்.

அதற்கு அவர்கள் : நாங்கள் அதை எங்கே ஆயத்தம் பண்ணும்படி சித்தமாயிருக்கிறீர் என்று கேட்டார்கள்.

அதற்கு அவர்: நீங்கள் நகரத்தில் பிரவேசிக்கும் போது, தண்ணீர்க் குடம் சுமந்து வருகிற ஒரு மனுஷன் உங்களுக்கு எதிர்ப்படுவான்; நீங்கள் அவனுக்குப் பின்சென்று, அவன் போகும் வீட்டிற்குள் நீங்களும் போய்,

அந்த வீட்டெஜமானை நோக்கி: நான் என் சீஷரோடுகூடப் பஸ்காவைப் புசிக்கிறதற்குத் தகுதியான இடம் எங்கே என்று போதகர் உம்மிடத்தில் கேட்கச் சொன்னார் என்று சொல்லுங்கள்.

அவன் கம்பள முதலானவைகள் விரித்திருக்கிற மேல்வீட்டிலுள்ள ஒரு பெரிய அறையை உங்களுக்குக் காண்பிப்பான்; அங்கே ஆயத்தம் பண்ணுங்கள் என்று சொல்லி அனுப்பினார்.

அவர்கள் போய், தங்களிடத்தில் அவர் சொன்னபடியே கண்டு, பஸ்காவை ஆயத்தம் பண்ணினார்கள்.

இயேசு கிறிஸ்து கடைசியாக பஸ்காவை சீஷர்களுடன் புசிக்க இடத்தை ஆயத்தம் செய்த போது "தண்ணீர்குடம் சுமந்து வரும் மனிதன் போகும் வீட்டை" கேளுங்கள் சகல ஆயத்தத்துடன் அவன் தருவான் என இயேசு சொன்னார். இன்னும் நாம் கர்த்தருடைய பந்தியை ஆசரிக்கும் போது அந்த சம்பவத்தை நினைத்து நம்மடைய வீடு இயேசு கிறிஸ்துவின் அன்பை பறைசாற்ற கொடுக்க ஆயத்தமா சிலுவையை சுமந்து உதவிய சிரேனே ஊரானாகிய சீமோன் லூக்கா 23:26 ,இயேசு கிறிஸ்துவின் சிலுவை பாடுகளில் ஒரு சிறிய பங்கை சிரேனே ஊரானாகிய சீமோன் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு சுமந்தான். அவனால் சுமக்க முடியவில்லை. பின்னர் இயேசுவே அதை ஏற்றுக் கொண்டு சுமந்தார். இயேசு கிறிஸ்துவை உண்மையாக நேசிப்போம் என்றால் அவர் மனதின் பாரங்களை ஏற்றுக் கொண்டு, ஆத்தும பாரத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் அவர் சித்தம் செய்ய நம்மை முழுமையாக அர்ப்பணிப்போம்.

**இயேசுவின் சரீரம் அடக்கப்பண்ணப்பட தனக்கு வைத்திருந்த கல்லறையை கொடுத்த அரிமத்தியனாகிய யோசேப்பு :**

இயேசு கிறிஸ்துவின் பாடுகள் மரணம் எத்தனை கொடுமையானது ? திரளாக பின்வந்த ஜனங்கள், சீஷர்கள், அப்போஸ்தலர்கள் அனைவருமே ஓடி விட்டார்கள். அரிமத்தியனாகிய யோசேப்பு பிலாத்துவினிடத்தில் தைரியமாக சென்று சாயங்காலமாகிறதே, கழுகுகளும், பறவைகள், மிருகங்களும் இயேசுவின் சரீரத்தை தின்று விடும் என்று பாசம் கொண்டு அதைக் கேட்டு வாங்கி நல்ல மரியாதைக்குரிய அடக்கத்தை செய்தான். இயேசு மரணத்தை ஜெயித்து உயிர்த்தெழுந்தார் என்பதற்கு அந்த கல்லறை இன்றும் சாட்சியாக உள்ளது.

எனக்கன்பானவர்களே, இயேசு கிறிஸ்துவின் பிறப்பு முதல் இறப்பு வரை அவருக்காக அவர் ஊழியத்தை நிறைவேற்றுவதற்காக கொடுத்தவர்கள் எத்தனையோ பேர். நிச்சயமாகவே தேவன் அவர்களை மறக்கவே மாட்டார். நாமும் கிறிஸ்துவுக்காக, சுவிசேஷத்திற்காக செய்யும் சிறிய அல்லது பெரிய காரியமாக இருந்தாலும் தேவன் அதை மறக்கவே மாட்டார். நிச்சயமாக நூறத்தனையாக இம்மையில் தருவது மட்டுமன்றி மறுமையில் நித்திய ஜீவனையும் கட்டளையிடுவார்.

மத்தேயு 25:40ல் அதற்கு ராஜா பிரதியுத்தரமாக : மிகவும் சிறியவராகிய என் சகோதரரான இவர்களில் ஒருவனுக்கு நீங்கள் எதைச் செய்தீர்களோ, அதை எனக்கே செய்தீர்கள் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்பார்.

கடைசியாக இயேசு கிறிஸ்து இவ்வுலகில் பிறப்பதற்காக மரியாள் தன்னையே முழுவதுமாக ஒப்புக் கொடுத்தார். நீதிமானாகிய யோசேப்பும் அவளை ஏற்றுக் கொண்டு உலகத்தைப் பற்றி எதையும் எண்ணாமல் தேவ நாம மகிமைக்காக தங்களை தேவனுக்காக ஒப்புக் கொடுத்தார்கள். நாம் நம்முடைய வாழ்வில் இயேசுவுக்காக, என்ன கொடுத்துள்ளோம். அந்த அருமை பாடல் முடியும் போது என்னையே நான் தருகிறேன் இயேசுவுக்கு அர்ப்பணித்தது போல நாமும் நம் தனிப்பட்ட வாழ்க்கை, நம் குடும்பம் இயேசுவிற்காக, சுவிசேஷத்திற்காக அர்ப்பணித்து தேவ ராஜ்ஜியத்தை கட்டுவோம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

## தமிழகத்தில் நடைபெற்ற முன்னேற்றப் பணி ஊழியங்கள்

**C.S.I. Home Church - 25.08.2016**

மிஷனெரி ஜெபகூடுகை நடைபெற்றது. இதில் ஷாலோம் ஊழியர் சகோ. செல்வதுரை அவர்கள் பணித்தள காரியங்களைப் பகிர்ந்துக் கொண்டு தேவசெய்தி அளித்து ஜெபித்தார்கள். இந்த வாய்ப்பை அளித்த மிஷனெரி ஐக்கியத்தின் செயலாளர் அவர்களுக்கும், Aunty Josephen அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***பரி.அந்திரேயா சி.எஸ்.ஐ. ஆலயம், திருநெல்வேலி 28.08.2016***

கர்த்தருடைய பெரிதான கிருபையால் திருநெல்வேலி மேலப்பாளையம் பரி. அந்திரேயா சி.எஸ்.ஐ. ஆலயத்தில் 28.08.2016ல் ஆராதனையில் கலந்துக் கொண்டு சகோ. டேவிட் அவர்கள் தேவசெய்தியையும், பாடல் ஆராதனையை சகோ. கிங்ஸ்லி குடும்பத்தினரும் நடத்தினார்கள். ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொள்ளவும் கிருபை பாராட்டினார் இந்த வாய்ப்பை அளித்த போதகர் கிப்ஸ்டன் அவர்களுக்கும் உபதேசியார் கோல்டுவின் அவர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**வேதபுரம் பரி. மத்தேயு சி.எம்.எஸ். ஆலயம் - *28.08.2016***

தேவனுடைய கிருபையினால் 28.08.2016 அன்று பரி.மத்தேயு சி.எம்.எஸ். ஆலயத்தில் ஆராதனையில் கலந்துக் கொண்டு ஆராதனையை நடத்தவும், தேவசெய்தி கொடுத்து ஷாலோம் ஊழியத்தைக் குறித்து பகிர்ந்துக் கொள்ளவும் கர்த்தர் கிருபை பாராட்டினார். இந்த வாய்ப்பை அளித்த உபதேசியார் சகோ. ஸ்டான்லி அவர்களுக்கும், போதகர் அவர்களுக்கும் எங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***சீயோன்புரம் சி.எஸ்.ஐ. ஆலயம் - 09.09.2016***

கர்த்தருடைய பெரிதான கிருபையால் முழு இரவு ஜெபம் ஆலயத்தில் வைத்து நடைபெற்றது. இதில் பாடல் ஆராதனையை சகோ. ராபின்சன் மற்றும் சகோ. தங்கத்துரை அவர்களும் நடத்தினார்கள். செய்தியை சகோ. செல்வதுரை அவர்கள் கொடுத்தார்கள். இதற்கு வாய்ப்பு அளித்த போதகர் கிறிஸ்டோபர் பாபு அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**C.S.I. Home Church - 22.09.2016**

கர்த்தருடைய பெரிதான கிருபையால் மிஷனெரி ஜெபகூடுகை நடைபெற்றது. இதில் பாடல் ஆராதனையை சகோ. ராபின்சன், சகோ. தங்கத்துரை அவர்கள் நடத்தினார்கள். செய்தி சகோதரி ஜெயந்தா அவர்கள் கொடுத்தார்கள். பின்பு இந்தியா தேசத்திற்காக ஜெபம் ஏறெடுக்கப்பட்டது. இதற்கு வாய்ப்பு அளித்த மிஷனெரி ஐக்கியத்தின் செயலாளர் அவர்களுக்கும், **Aunty** ஜோஸ்பின் அவர்களுக்கும் எங்களது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

***இம்மானுவேல் சி.எஸ்.ஐ. ஆலயம், சங்கனாங்குளம் திருநெல்வேலி 25.09.2016***

கர்த்தருடைய பெரிதான கிருபையால் காலை ஆராதனையில் நாகர் கோவில் கிளை அலுவலகத்தில் உள்ள ஷாலோம் ஊழியர்கள் கலந்துக் கொண்டார்கள். சகோ. **டேவிட்** அவர்கள் தேவசெய்தி கொடுத்தார்கள். இந்த வாய்ப்பினை அளித்த போதகருக்கும், உபதேசியாருக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## தமிழ்நாட்டில் நடைபெற்ற சிறுவர் ஊழியம்

கர்த்தருடைய பெரிதான கிருபையால் ஷாலோம் ஊழியத்திலிருந்து சிறுவர்களுக்கான நிகழ்ச்சியை நடத்தும்படியாக கர்த்தர் கிருபை பாராட்டி வருகிறார். இந்த நிகழ்ச்சியை செப்டம்பர் மாதத்தில் 06.09.2016 அன்று தூத்துக்குடி, கால்டுவெல் காலனி **கிருபா நர்சரி – பிரைமரி** பள்ளிக்கு சென்று அங்குள்ள 150க்கும் அதிகமான பிள்ளைகளுக்கு இயேசுவைப் பற்றிக் கூறி வேதத்திலிருந்து யோனா கதையையும், அபிநயத்தோடு பாடல்களையும், கற்றுக் கொடுத்தோம். மேலும் Puppet Show நிகழ்ச்சியும் செய்து காட்டடப்பட்டது. பிள்ளைகள் அனைவரும் மிகுந்த உற்சாகத்தோடு இதில் கலந்துக் கொண்டார்கள். ஷாலோம் ஊழியத்தில் உள்ள சகோதரிகள் இந்நிகழ்ச்சியை நடத்தினார்கள்.

பிள்ளைகளுக்கு வசனம் கற்றுக் கொடுக்கப்பட்டு பிள்ளைகள் அனைவரும் அதை மனப்பாடம் செய்து அநேக பிள்ளைகள் முன்வந்து வசனத்தை சொன்னார்கள், சொன்ன அனைவருக்கும் சிறு பரிசுகளை வழங்கினோம். இந்த நிகழ்ச்சிகளை நடத்துவதற்கு வாய்ப்புக் கொடுத்த ***கிருபா பள்ளி முதல்வருக்கும் தலைமையாசிரியை*** அவர்களுக்கும் மற்றும் அனைத்து ஆசிரியர்களுக்கும் எங்கள் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இதனை நல்லமுறையில் நடத்தித் தந்த தேவாதி தேவனுக்கு கோடா






உங்கள் சபையிலோ அல்லது பள்ளிகளிலோ இதுபோன்ற **சிறுவர் நிகழ்ச்சிகள்** நடத்த விரும்பினால் எங்களோடு தொடர்பு கொள்ளுங்கள்.சகோதரி. சாந்தி. செல் : 9688344522

## மத்தியப்பிரதேசம் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**Pr. ஜாம்புசிங் டின்டோட்** பிசோலி

ரமிளாபேன் என்ற சகோதரி ஒரு வருடமாக இரத்தப்போக்கு வியாதியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பலவித வைத்தியம் செய்தும் பலனில்லை. அதிக பணம்செலவு செய்தும் சுகம் கிடைக்கவில்லை.

**Pr.தும்லா கார்ட்** வால்பூர்

சஜன் என்ற சகோதரன் மலேரியா காய்ச்சலினால் பாதிக்கப் பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் மந்திரம் செய்தும் பலனில்லை. இந்நிலையில் ஆடு மற்றும் கோழிகளை வெட்டி பலி செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இறுதியில் இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr. சுக்தேவ் முனியா** அந்தர்வேலியா

மாலாதாதா என்ற சகோதரன் 3 வருடமாக இடுப்பு வலியினால் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் மன்றாடி சபைக்கு சென்று ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

**Pr.கரக்கியா டாமோர்** குஜர்பாடா

நாத்துபேன் என்ற சகோதரி மூளை கோளாறினால் மிகவும் வேதனைப்பட்டார். பல வித வைத்தியம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் நாத்துபேனை சபைக்கு அழைத்துசென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

**Pr. மால்சிங் சகோரியா** சுளியா

இந்துருபேன் என்ற சகோதரி 2 வருடமாக தொண்டையில் கட்டி இருந்தது. பைத்தியம் பிடித்தவர்போல மிகவும் வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் சபைக்கு அழைத்துசென்று கண்ணீரோடு ஜெபித்தபோது அற்புத விடுதலையை தேவன் கொடுத்தார்.

**Pr.மால்சிங் கராசியா** பீகார்

மன்சுபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப் பட்டிருந்தார். பல வைத்தியம் மற்றும் மந்திர செய்வினை செய்தும் 5 கோழிகளை பலி செலுத்தியும் பலனில்லை. மோசமான நிலையில் இவரது சித்தப்பா மன்சுபேனை சபைக்கு அழைத்துசென்று ஜெபித்தபோது அற்புத விடுதலைப் பெற்றார்.

**Pr.ஜங்கலா டாமோர்** காகன்வானி

வாளாபேன் என்ற சகோதரி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். அதிக பணம் செலவு செய்தும் 60 ஆயிரம்வரை

## இராஜஸ்தான் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**Pr.லக்மன்லால் கட்டாரா** பாட்டார்

சுராபேன் என்ற சகோதரி வயிறு எரிச்சலினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்

ஆளிஸ் என்ற சகோதரி வியாதிப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr. கோவிந்த் மெய்டா** தேவ்லா

ஒரு சகோதரி குழந்தை இல்லாமல் 5 வருடமாக வேதனைப்பட்டார். பல வைத்தியம் செய்தும் மந்திரம் செய்தும் பலனில்லை. இந்நிலையில் சபைக்கு சென்று ஜெபித்தபோது தேவன் குழந்தை பாக்கியத்தை கட்டளையிட்டார்.

**Pr. மோகன் காட்** புச்சியாவாடா

சாரதா என்ற சகோதரி ஒரு வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல மந்திரவாதிகளை நாடியும் மந்திரம் செய்தும் மருத்துவம் செய்தும் பலனில்லை. இறுதியில் இவரை ஷாலோம் சபைக்கு அழைத்து சென்று ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

**Pr. பக்கல்சந்திர ஹடா** பிச்சாவாடா

சவிதாபேன் என்ற சகோதரி தலைசுற்றினால் படபடப்பு இருந்தது. இதனால் எந்த வேலையும் செய்ய முடியாமல் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr.பிரபுலால் நினாமா** சூபேல்

பாருபேன் என்ற சகோதரியின் கணவர் குடிப்பழக்கத்திற்கு அடிமையாக இருந்தார். இதனால் பல வித நோய்களினால் பாதிக்கப்பட்டிருந்தார். அதிக பணம் செலவழித்து மருத்துவம் செய்தும் எந்தவித பலனுமில்லை. இறுதியில் இயேசுவைப் பற்றி கூறி பாரத்தோடு ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

கக்ரிபேன் என்ற சகோதரி சுவாசிக்க முடியாமல் வேதனைப்பட்டார். இயேசுவை முழுமையாக விசுவாசித்து ஜெபித்தபோது விடுதலைப் பெற்றார்.

**Pr.தினேஷ் மச்சார்** கடூலி

நரேந்திரபாய் என்ற சகோதரன் 5 வருடமாக வியாதிப்பட்டிருந்தார். பல மந்திரவாதிகளை நாடியும் மருந்துகள் சாப்பிட்டும் பலனில்லை. இந்நிலையில் இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

**Pr. மனீஷ் மெய்டா** மேலான்

சந்துபேன் என்ற சகோதரி உதிரப்போக்கினால் வேதனைப்பட்டார். இயேசுவை விசுவாசித்து ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

## குஜராத் பணித்தளத்தில் தேவன் செய்த அற்புதங்களுக்காக தேவனைத் துதியுங்கள்

**Pr.நவல்சிங் பில்வான்** களியாவாட்

மது என்ற சகோதரி 10 வருடமாக சரீர பெலவீனத்தால் வேதனைப்பட்டார். மந்திரம் செய்தும் மருத்துவம் பார்த்தும் எந்தவித பலனுமில்லை. இவரை சபைக்கு அழைத்து சென்று கண்ணீரோடு எண்ணெய்பூசி ஜெபித்தபோது பரிபூரண சுகம் பெற்றார்.

**Pr.மன்னு பாபோர்** சானாசெர்

ஹவ்சிங் என்ற சகோதரனின் வயிற்றில் கட்டி இருந்தது. பல வைத்தியம் செய்தும் மந்திரவாதிகளை நாடி சென்றும் ஆடு கோழிகளை பலியிட்டும் எந்தவித பலனுமில்லை. இந்நிலையில் ஹவ்சிங் சகோதரனை சபைக்கு அழைத்து சென்று எண்ணெய்பூசி ஜெபித்தபோது கட்டி மறைந்து பரிபூரண விடுதலைக் கிடைத்தது.

**Pr.மங்குபுரியா** பாட்டன்புரா

ஹேமா என்ற சகோதரி பக்கவாத வியாதியினால் பாதிக்கப் பட்டிருந்தார். பல மருந்துகளை சாப்பிட்டும் மந்திரம் செய்தும் சுகம் கிடைக்கவில்லை. இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து பாரத்தோடு ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

தன்னாபாய் என்ற சகோதரன் தலைசுற்று மற்றும் இடுப்பு வலியினால் பல நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் பலனில்லை. இறுதியில் சபைக்கு அழைத்து சென்று கண்ணீரோடு ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr.மன்னு டாமோர்** அப்லோடு

டித்துபேன் என்ற சகோதரி வாந்தி மற்றும் வயிற்றுப்போக்கினால் மிகவும் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் கண்ணீரோடு மன்றாடி ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

**Pr.பாரத் டாமோர்** தோலகாக்ரா

ராஜீபாய் என்ற சகோதரன் மஞ்சள் காமாலை நோயினால் பல நாட்களாக பாதிக்கப்பட்டிருந்தார்.மந்திரம் மற்றும் மருத்துவம் செய்தும் பலனில்லை. இந்நிலையில் இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்று ஜெபித்தபோது அற்புத சுகம் பெற்றார்.

**Pr.மகன் சேலட்** பாம்பேலா

காந்தாபேன் என்ற சகோதரி 5 வருடமாக அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டிருந்தார். பல வைத்தியம் செய்தும் விடுதலைக் கிடைக்கவில்லை. காந்தாபேனை சபைக்கு அழைத்து சென்று பாரத்தோடு ஜெபித்தபோது பரிபூரண விடுதலைப் பெற்றார்.

**Pr.மகேஸ் பர்மார்** ஜாலோத்

மடிபேன் என்ற சகோதரி கை கால் வலி மற்றும் சரீர பெலவீனத்தால் மிகவும் வேதனைப்பட்டார். இயேசுவின் நாமத்தில் சபைக்கு சென்று ஜெபித்தபோது சுகம் பெற்றார்.

# ஷாலோம் சுதேச ஊழியர் சாட்சி




என்னுடைய பெயர் **மோகன் காட்.** நான் பீல் ஆதிவாசி குடும்பத்தைச் சேர்ந்தவன். நான் பலவித தேவதைகளை வணங்கி மந்திரவாதியாக இருந்தேன். பலவித மிருகங்களை பலியிட்டு மூடநம்பிக்கையுள்ளவனாக சமாதானம் இல்லாமல் வாழக்கையில் வாழ்ந்து வந்தேன். இந்நிலையில் எனது அண்ணன் மனைவி அசுத்த ஆவியினால் பாதிக்கப்பட்டு பாதிப்புக்குள்ளானார். என்னிடம் அழைத்து வந்தார்கள். எவ்வளவோ மந்திரம் செய்தும், மருந்துகள் சாப்பிட்டும் இதற்காக 50,000 வரை செலவு செய்தும் பலனில்லை.

இந்நிலையில் ஒரு விசுவாச சகோதரி இயேசுவைப் பற்றி கூறி எங்களுக்காக பாரத்தோடு ஜெபித்தபோது கர்த்தர் மனமிரங்கி என் அண்ணன் மனைவிக்கு பரிபூரண விடுதலைக் கொடுத்தார். இவற்றை அறிந்ததில் இருந்து இயேசு தான் மெய்யான தெய்வம் என்று உணர்ந்தவனாக என் முழு குடும்பமும் 1999 இல் இயேசுவை ஏற்றுக்கொண்டோம். 2001 இல் ஞானஸ்நானம் பெற்றேன். 2002 இல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 வருட வேதபாட மற்றும் ஊழியப் பயிற்சி பெற்று குடும்பமாக ஊழியத்தை செய்து வருகிறோம். முதலில் எங்கள் கிராமத்தில் 1 குடும்பம் இயேசுவை ஆராதித்து வந்தார்கள். தற்போது 60 குடும்பங்கள் இயேசுவை ஆராதித்து வருகிறார்கள். 5 கிளை சபைகளும் 7 ஊழியர்களும் தேவனுடைய ஊழியத்தை செய்து வருகிறார்கள்.

எங்கள் கிராம மக்கள் அனைவரும் இயேசுவை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற வாஞ்சையோடு ஊழியத்தை நிறைவேற்றி வருகிறோம். எங்களுக்கு 8 பிள்ளைகள் இருக்கிறார்கள். எங்கள் குடும்பத்திற்காகவும் ஊழியத்திற்காகவும் ஜெபியுங்கள். நாங்கள் கர்த்தருக்கென்று வைராக்கியமாய் எழும்பி அவருடைய ஊழியத்தை நிறைவேற்றவும், எங்களுக்காக ஜெபித்துக் கொள்ளுங்கள்.

இந்த சுதேச ஊழியரை தாங்குவோர்
**MUF,** மதுரை ( சகோ. பால்ராஜ், திருப்பாலை)

மாதந்தோறும் ரூ.2500/ கொடுத்து சுதேச ஊழியரை தாங்க முன்வாருங்கள்

# ஷாலோம் வாலிபர் கூடுகையில்



பெயர் : ஹிம்ராஜ் பபேரியா கிராமம் : கேடி மாநிலம் : மத்தியப்பிரதேசம்

எனது பெயர் ஹிம்ராஜ். நான் எனது கிராமத்தில் ஒரு பெரிய ரௌடி. எங்கு சண்டை நடந்தாலும் நான் தான் முதல் ஆளாக அங்கு இருப்பேன். சாராயம், போதைப் பழக்கத்திற்கு அடிமையாக இருந்தேன். திருடுவதையும் காசுக்காக யாரை வேண்டுமானாலும் அடிப்பதையும் வழக்கமாக கொண்டிருந்தேன். எனது கிராமத்து சபை ஊழியர் என்னை வாலிபர் கூட்டத்தில் கலந்துக் கொள்ளும்படி அனுப்பி வைத்தார். சவுல் பவுலாக மாறியதைக் குறித்த செய்தியைக் கேட்டபொழுது நான் செய்வது பாவம், அதினிமித்தம் நான் இயேசுவை துன்பப்படுத்துகிறேன் என்று உணர்ந்து, மனந்திரும்பி அழுது என்னை ஒப்புக் கொடுத்தேன். அதே வேளையில் தேவன் என்னை பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பி, அந்நிய பாஷையில் பேசக்கூடிய கிருபையையும் தந்தார். நான் இனி இயேசுவுக்காக மட்டும் வாழ்வேன் என்று நான் என்னை அர்ப்பணித்தேன்.





பெயர் : லக்குகுமாரி பாரியா

கிராமம் : குல்தி மாநிலம் : இராஜஸ்தான்

நான் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமென்ற வாஞ்சையோடு வாலிபர் கூட்டத்திற்கு வந்தேன். என்னுடைய வலது கால் பெலவீனமாக இருந்தது. என்னால் விரைவாக நடக்க முடியாமல் இருந்தது. ஜெப வேளையில் தேவன் எனக்கு சுகத்தையும், பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும் கொடுத்தார். இயேசுவுக்கு ஸ்தோத்திரம் !

பெயர் : லீலாசர் போட்டா கிராமம் : குந்தனிஹலா மாநிலம் : இராஜஸ்தான்

# தேவன் எழுப்பிய சாட்சிகள்



நான் வாலிபர் கூட்டத்தில் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டு மென்ற வாஞ்சையோடு ஜெபித்தேன் தேவன் என்னை பரிசுத்த ஆவியினால் நிரப்பினார். மேலும் எனக்கு அதிகமாக கோபம் வரும். நான் யாரிடம் பேசினாலும் குறிப்பாக சிறு பிள்ளை களை பயமுறுத்தி பேசுவேன். ஆனால் இன் றைய தேவசெய்தியைக் கேட்ட பின்பு என்னு டைய சுபாவம் மாறியது. இனிமேல் நான் யாரிட மும் கோபப்படமாட்டேன் என்று என்னை அர்ப்ப ணித்தேன்.

பெயர் : சூரியாபேன் கடியா கிராமம் : பண்டு வால் மாநிலம் : இராஜஸ்தான்



நான் வாலிபர் கூடுகைக்கு வருவதற்கு எனது கிராமத்திலிருந்த எனக்கு வண்டி கிடைக்க வில்லை. நான் நடந்தே கூட்டம் நடைபெறும் இடத்திற்கு வந்து சேர்ந்தேன். ஜெபவேளையில் தேவன் என்னை பரிசுத்த ஆவியின் அபிஷேகத் தினால் நிரப்பினார். மேலும் நான் அதிகமாக கெட்ட வார்த்தைகளைச் சொல்லி அநேகரை திட்டுவேன். என்னைப் பெற்ற தாயைக் கூட நான் கெட்டவார்த்தைகளைச் சொல்லி திட்டு வேன். வசனத்தைக் கேட்டபின் நான் இனிமேல் கெட்டவார்த்தைகளைப் பேசமாட்டேன், பெற் றோரைக் கனம் பண்ணுவேன் என்று என்னை அர்ப்பணித்தேன். தேவனுக்கு மகிமை!

பெயர் : மகன் கராசியா கிராமம் : பண்டுவால் மாநிலம் : இராஜஸ்தான்



நான் இந்தக் கூட்டத்திற்கு வருவதற்கு வீட்டிலிருந்து புறப்படும் போது இயேசுவே எனக்கு இன்றைக்கு உம்முடைய அபிஷேகம் வேண்டும் என்று சொல்லி ஜெபித்து வந்தேன். தேவன் தம்முடைய பரிசுத்த ஆவியின் வல்லமையினாலும் அபிஷேகத்தினாலும் நிரப்பினார்.

# எழுந்து கட்டுவோம் வாருங்கள்

2016 இல் பீல் விசுவாசிகளுக்காக 100 கிராமங்களில் தேவ நாம மகிமைக்காக 100 கிராம ஆலயங்கள் கட்டப்பட தேவையான நிதி சந்திக்கப்பட ஜெபித்து கரம் கொடுக்க அன்புடன் அழைக்கிறோம்.

## செய்யவேண்டிய வேலையோ மிகப் பெரியது

தேவ கிருபையால் தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட நம் பீல் சுதேச மிஷனெரிகள் (500க்கும் அதிகமான) பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தினால் நிரப்பப்பட்டவர்களாய் நற்செய்தியை அறிவித்து பாவங்கள், சாபங்கள் நோய்களிலிருந்து மக்கள் திரளாக கிராம கிராமங்களாய் இயேசுவை சொந்த இரட்சகராய் ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்று வருகிறார்கள். 600 க்கும் அதிகமான கிராமங்களில் சபைகள் கூடி ஆராதனை நடைபெற்று வருகிறது. இந்த வருடத்தில் குறைந்தது 100 கிராமங்களில் ஆலயங்கள் கட்ட திறந்த வாசல்களையும், வாய்ப்புகளையும் தேவன் தந்துள்ளார்.

25 குடும்பங்கள் ஆண்டவரை ஏற்றுக்கொண்ட பின்பு 7 மூப்பர்களுக்குப் பயிற்சி கொடுக்கப்படுகிறது. சுதேச ஊழியர் தன்னுடைய நிலத்தை ஆலயம் கட்டுவதற்கு கொடுக்க முன் வருகிறார்கள். குஜராத், மத்தியப்பிரதேசம், இராஜஸ்தான் மாநிலங்களில் (30X18), 40X20, 50X20 அளவுகளில் முறையே 1 இலட்சம் 2 இலட்சங்கள் 3 இலட்சங்கள் நிதி உதவி கொடுத்து ஆலயம் கட்டித் தரும் ஆதரவாளர்கள் தேவை. நீங்கள் சபையாக, குழுவாக, குடும்பமாக கட்டிக் கொடுக்க முன் வாருங்கள்.

மேலும் 7000 கிராமங்களில் வாழும் பீல் மக்களுக்கு சுவிஷேசம் அறிவிக்க விஷேச அபிஷேகம் பெற்ற 48 சுதேச ஊழியர்கள் 12 குழுவாக மாதந்தோறும் ஒவ்வொரு வெள்ளிக்கிழமை 48 கிராமங்களில் நடத்துகிற நற்செய்தி கூட்டங்கள் மூலமாக தேவன் பல அற்புத அடையாளங்களை நடத்தி வருகிறார். அதன் மூலமாக ஒவ்வொரு மாதமும் பல நூறு குடும்பங்கள் புதிதாக தேவனை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டு அனுதினமும் சபையில் சேர்க்கப்பட்டு வருகிறார்கள்.



# 2016 ஆம் வருடத்தில் 100 கிராம ஆலயங்களைக் கட்டி எழுப்ப



- ரூ. 2 இலட்சங்கள் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 100 பேர்கள்
- ரூ. 1 இலட்சம் நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 200 பேர்கள்
- ரூ. 50,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 400 பேர்கள்
- ரூ. 20,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 1000 பேர்கள்
- ரூ. 10,000 நிதி உதவி தந்து ஜெபித்துத் தாங்கும் ஆதரவாளர்கள் 2000 பேர்கள்

ரூ. 2 இலட்சங்கள், ரூ. 1 இலட்சம் கொடுக்கக்கூடிய ஆதரவாளர்களுக்கு தனியான சபை கட்டுமானப்பணி கொடுக்கப்பட்டு, ஆலய பிரதிஷ்டை DVD மற்றும் புகைப்படங்கள், அறிக்கை அனுப்பி வைக்கப்படும். மற்ற நிதியாளர்களுக்கு இணைந்து கட்டப்பட்ட ஆலயத்தின் படங்கள், DVD மற்றும் அறிக்கைகள் அனுப்பி வைக்கப்படும்.

- உங்கள் சபையில் சிறப்புக் காணிக்கைக் கொடுப்பவர்களை எழுப்பி சபை மூலமாக ஆலயங்கள் கட்ட முன்வாருங்கள்.
- உங்கள் குடும்பத்தின் சார்பில் அல்லது நீங்களும் உடன் பிறந்த உங்கள் உறவினர்கள் குடும்பங்களுடன் இணைந்து ஆலயம் கட்டிக் கொடுக்க முன்வாருங்கள்.
- மாதந்தோறும் தவணை மூலமாகக் கூட ஆலயம் கட்டிக் கொடுக்க முன்வாருங்கள்.
- மற்றவர்களுக்கு குறிப்பாக வசதியுள்ளவர்களுக்கு அறிமுகம் செய்து ஆலயங்கள் கட்டிக் கொடுக்க முன்வாருங்கள்.

நிதி உதவி அனுப்பும்போது Sharing Love Mission என்ற பெயருக்கு DD "100 கிராம ஆலய கட்டுமானப் பணிக்கானச் சிறப்பு நிதி" என்று குறிப்பிட்டு அனுப்புங்கள்.

**"தாவீதுக்கு அருளின நிச்சயமான கிருபைகளை உங்களுக்கு நித்திய உடன்படிக்கையாக ஏற்படுத்துவேன்" (ஏசாயா 55:3)**



# இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரம் (அகமதாபாத்) ஆசீர்வாத கூடுகை (செப். 8, 9)

கர்த்தருடைய பெரிதான கிருபையால் கடந்த செப்டம்பர் மாதம் 8,9 ஆகிய தேதிகளில் அகமதாபாத் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்தில் விசேஷ ஆசீர்வாதக் கூடுகையில் பேராயர் தேவதாஸ் மற்றும் சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்களும் தேவ வார்த்தையைப் பகிர்ந்துக் கொண்டார்கள். கலந்துக் கொண்ட அநேகர் தேவ வார்த்தையின் மூலம் ஆசீர்வதிக்கப்பட்டனர். தேவ வார்த்தையைக் கேட்டுக் கொண்டு இருக்கும் போதே அநேகர் வியாதியிலிருந்து சுகத்தைப் பெற்றுக் கொண்டனர். இறுதி ஜெப வேளையில் பரிசுத்த ஆவியானவர் பலமாய் அனைவர் மீதும் இறங்கி வந்தார். அநேகர் பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தையும், அற்புத சுகத்தையும் பெற்றுக் கொண்டனர். அழைப்புக் கொடுத்த இயேசு அழைக்கிறார் அகமதாபாத் ஜெப கோபுரத்தின் பொறுப்பாளர் சகோ.பாவேஷ் அவர்களுக்காக தேவனுக்கு நன்றி செலுத்துகிறோம். இந்தக் கூட்டங்கள் மூலம் தேவனுடைய நாமம் மகிமைப்பட்டது. அல்லேலூயா!

## அற்புத சாட்சி



எனது பெயர் சைலேஷ் பாய். கடந்த 6 மாதமாக எனது தோளில் கடுமையான வலி இருந்தது. இதினிமித்தம் என்னால் எனது கைகளை உயர்த்த முடியாது. மிகவும் வலி ஏற்படும். நான் எனது பனியன் அல்லது சட்டை போடுவதற்கு எனது மனைவி அல்லது எனது மகன் தான் உதவி செய்வார்கள். எவ்வளவோ மருந்து எடுத்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் நான் அகமதாபாத் இயேசு அழைக்கிறார் ஜெப கோபுரத்திற்கு தற்செயலாய் நானும், எனது மனைவியும் ஜெபிக்கும்படி வந்தோம். அங்கு கூட்டம் நடந்து கொண்டிருப்பதைப் பார்த்து நாங்களும் கூட்டத்தில் அமர்ந்தோம். சகோதரி வஹிதா தேவதாஸ் அவர்கள் செய்தி கொடுத்துக் கொண்டிருந்த வேளையில் பணித்தளங்களில் நடக்கும் அற்புத சாட்சிகளைப் பற்றிக் கேட்டுக் கொண்டிருக்கும் போது எனக்குள் விசுவாசம் அதிகமானது. நானும் விசுவாசத்துடன் வசனத்தைக் கேட்டுக் கொண்டிருந்தேன். திடீரென்று எனது தோளில் இருந்த வலி எங்கு சென்றது என்றே தெரியவில்லை. அந்த வேளையிலேயே எனக்கு பரிபூரண சுகம் கிடைத்தது. இப்பொழுது என்னால் கைகளை சாதாரணமாக உயர்த்த முடிகிறது. எனக்கு சுகம் கொடுத்த இயேசுவுக்கு நன்றி.

# ஹரேந்திரகட் கிராம ஆலய அறிக்கை - இராஜஸ்தான்



ஹரேந்திரகட் என்ற கிராமம் இராஜஸ்தான் மாநிலத்திலுள்ள பான்ஸ் வாடா மாவட்டத்தில் சஜன்கட் தாலுகாவில் அமைந்துள்ளது. இந்தக் கிராமத்தில் வாழும் மக்கள் சாராயம் பீடி தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாகவும் சண்டை போடுபவர்களாகவும் விக்கிரக ஆராதனை செய்பவர்களாகவும் மந்திரவாதிகளை நாடி அந்தகாரத்திலும் பாவத்திலும் வாழ்பவர்கள். ஊழியர் பிரதாப்சிங் பாரியா அவர்கள் இயேசுவை அறியாத போது சாராயம் பீடி தம்பாக்கு போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். 24 மணி நேரமும் குடிபோதையில் இருப்பார் குடித்து விட்டு குடும்பத்தில் சண்டை போடுவார். இதினிமித்தம் குடும்பத்தில் சமாதானமில்லாமல் இருந்தது. சாராயம் குடித்து குடித்து பணமெல்லாம் செலவழிந்ததினிமித்தம் வறுமை ஏற்பட்டது இந்த நிலையில் ஷாலோம் ஊழியர் பதாகராசியா அவர்கள் இயேசுவைப் பற்றிக்கூறி இவருக்காக ஜெபித்த போது தேவன் பாவத்திலிருந்து விடுதலைக் கொடுத்தார். மேலும் குடும்பத்தில் சமாதானம் கிடைத்தது. அந்த அற்புதத்தின் மூலம் 1999ல் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டார்கள். பின்பு தொடர்ந்து ஷாலோம் குன்டா சபைக்குச் சென்று வேத வசனத்தைக் கேட்டு ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு தன்னை ஊழியம் செய்ய அர்ப்பணித்து 2000ல் ஷாலோம் ஊழியத்தில் இணைந்து தனது சொந்த கிராமமாகிய ஹரேந்திரகட்-ல் ஊழியம் செய்ய ஆரம்பித்தார்.

தனது சொந்த வீட்டில் 6 பேருடன் கூட்டம் நடத்த ஆரம்பித்தார். ஆரம்ப நாட்களில் கூட்டம் நடத்தக் கூடாது என்று இவருடைய சொந்தக்காரர்களும் கிராம மக்களும் மிகவும் எதிர்த்தனர். 2 வருடங்கள் எதிர்ப்பு இருந்தது. ஆனாலும் ஊழியரும் விசுவாசிகளும் சோர்ந்து போகாமல் உபவாசத்துடன் ஜெபித்ததில் தேவன் எதிர்ப்புகளை மாற்றிப் போட்டார். ரங்காபாய் என்ற சகோதரர் 5 வருடமாக பிசாசின் பிடியினால் பாதிக்கப்பட்டு மிகவும் கஷ்டப்பட்டார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் எந்த பலனுமில்லை. இந்நிலையில் ஹரேந்திரகட் சபையில் கூட்டத்தில் கலந்துக் கொண்ட அவருக்காக ஊழியர் ஜெபித்த போது தேவன் பரிபூரண விடுதலையைக் கொடுத்தார். அந்த அற்புதத்தின் மூலம் அநேக மக்கள் சபைக்கு வர ஆரம்பித்தனர். சபை வளர்ந்து பெருகியது. பின்பு 2001ம் ஆண்டு சிறிய ஆலயம் கட்டப்பட்டு ஆராதனை நடைபெற்று வந்தது. தற்போது 60குடும்பங்கள் இயேசுவை ஏற்றுக் கொண்டு வாரந்தோறும் ஆராதித்து வருகிறார்கள். 170 பேர் ஞானஸ்நானம் பெற்றுள்ளனர். இந்நிலையில் இடப்பற்றாக்குறையின் காரணமாக ஊழியர் பிரதாப்சிங் பாரியா அவர்கள் காணிக்கையாக கொடுத்த தனது சொந்த நிலத்தில் தேவ நாம மகிமைக்காக ஆலயம் புதுப்பிக்கப்பட்டு 17.09.2016 அன்று **பேராயர் தேவதாஸ்** அவர்கள் மூலம் பிரதிஷ்டை செய்யப்பட்டது. தேவனுக்கே மகிமை.

இந்த கிராம ஆலயம் **சகோ. ஆசீர்பாண்டியன்,(YMCA) சென்னை** அவர்களின் குடும்பத்தின் சார்பில் வழங்கப்பட்ட நிதியுதவியின் மூலம் கட்டி முடிக்கப்பட்டது.

**நீங்களும் உங்கள் குடும்பத்தின் சார்பில் ஆலயங்களை கட்ட முன்வருங்கள்**

# சகோ. ஆசீர்பாண்டியன், (YMCA) சென்னை அவர்களின் பணித்தள வருகை





ஹரேந்திரகட் கிராம ஆலய பிரதிஷ்டை...



ஆராதனை வேளையில்....



தேவனை துதிக்கும் சபை மக்கள்



செய்தி வேளையில்



சுதேச ஊழியர் பிரதாப்சிங் அவர்களுடன்



வேதாகமங்கள் வழங்கியபோது



இசைக்கருவிகள் வழங்கியபோது...

## சகோ.ஆசீர் பாண்டியன் (சென்னை) அவர்களின் பணித்தளவருகை

கர்த்தருடையபெரிதானகிருபையால் நமது ஷாலோம் பணித்தளத்தைப் பார்வையிடும்படியாக சென்னையிலிருந்து சகோ. ஆசீர் பாண்டியன் அவர்கள் கடந்தசெப்டம்பர் மாதம் 17 மற்றும் 18 ஆகிய தேதிகளில் வருகை தந்திருந்தார்கள். 17-ம் தேதியன்று சகோ.சாமுவேல் அவர்களுடன் குஜராத் பகுதியிலுள்ள ஷாலோம் சபைகளில் பாரேவா, ரீசும்புரா ஆகிய ஆலயங்களைப் பார்வையிட்டு, ஊழியரையும் குடும்பமாக சந்தித்து ஜெபித்தார்கள். மேலும் இராஜஸ்தான் மாநிலத்தில் உள்ள கோய்கா பேராலயத்தையும் பார்வையிட்டார்கள். அதைத் தொடர்ந்துசகோ. ஆசீர் பாண்டியன் அவர்களின் சார்பில் கொடுக்கப்பட்ட நிதியுதவியின் மூலம் புதிப்பிக்கப்பட்ட ஹரேந்திரகட் ஆலயப் பிரதிஷ்டை ஆராதனையில் கலந்துகொண்டு,தேவநாம மகிமைக்காக ஷாலோம் திருமண்டலத்திற்கென்று ஆலயத்தை பேராயர். தேவதாஸ் அவர்களுடன் இணைந்து பிரதிஷ்டை செய்தார்கள். தொடர்ந்து விசுவாசிகள் அனைவரும் உற்சாகமாக பாடி, நடனமாடி தேவனைத் துதித்தார்கள். ஆலயத்தில் கர்த்தருடையமகிமை இறங்கியது. அதைத் தொடர்ந்து பீல் கலாச்சார முறையின்படி சிறப்பு வரவேற்பளிக்கப்பட்டது. பின்பு விசுவாசிகளுக்கென்று வேதாகமங்களைவழங்கினார்கள். அதைத் தொடர்ந்து பிரதிஷ்டை செய்யப்பட்ட ஆலயத்திற்கென்று ஆம்பளிஃபயர், மைக்,டோலக், போன்றசாதனங்களை ஜெபித்துவழங்கினார்கள். பின்பு சகோ. ஆசீர் பாண்டியன் அவர்கள் தேவவார்த்தையைப் பகிர்ந்துகொள்ள பேராயர். தேவதாஸ் அவர்கள் மொழி பெயர்த்தார்கள். பின்பு ஜெபத்துடன் ஆலயப்பிரதிஷ்டை ஆராதனை இனிதே நிறைவுற்றது.

மறுநாள் 18-ம் தேதிஞாயிற்றுக் கிழமையன்று குஜராத்திலுள்ள தெல்சர் கிராம ஆலயத்தைப் பார்வையிடவும், ஊழியரின் குடும்பத்தையும் சந்தித்து ஜெபிக்கவும் தேவன் கிருபை செய்தார். அதைத் தொடர்ந்து ரூப்பக்கேடா, மாண்ட்லி, நவாப்பாடா ஆகிய ஆலயத்தைப் பார்வையிட்டு, பின்பு நேராக அந்தர்வேலியா சபையில் நடைபெற்ற ஆராதனையில் பங்குபெற்று, விசுவாசிகளுக்கு உற்சாகமான வார்த்தைகளைக் கூறிதனது வாழ்த்துதலை பகிர்ந்துகொண்டார்கள். அதைத் தொடர்ந்து அதேசபையில் வைத்து நடைபெற்ற ஷாலோம் வாலிபர் முகாமிற்கு கலந்து கொள்ள வந்திருந்த வாலிப ஆண்கள் மற்றும் பெண்களைச் சந்தித்து அவர்களுக்கு வேதத்திலிருந்து அறிவுரை கொடுத்து, பின்பு அவர்களனைவருக்காகவும் சிறப்பு ஜெபத்தை ஏறெடுத்தார்கள். அதனைபோராயர். தேவதாஸ் அவர்கள் மொழிப் பெயர்த்தார்கள். அதைத் தொடர்ந்து அவர்கள் பணித்தளப் பார்வையை முடித்துவிட்டு திரும்பினார்கள்.



# ஞாபகப்படுத்துகிறோம்...

## (கிறிஸ்துமஸ் பண்டிகைக்காக)



### அன்பான உண்டியல் ஆதரவாளர்களே...!

அன்பின் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்! கிறிஸ்துமஸ் பண்டிகை தினத்தை நெருங்கிக் கொண்டிருக்கும் நாம், வரப்போகின்ற கிறிஸ்துமஸைக் கொண்டாட ஜெபித்து இப்பொழுதே ஆயத்தப்படுவது நமது கடமையாகும். கிறிஸ்துமஸ் நாளுக்காக ஏதாவது செய்ய வேண்டும் என்ற வாஞ்சையோடு, நீங்கள் எங்களிடமிருந்து பெற்றுக் கொண்ட உண்டியலில் அந்த ஆதிவாசிப் பிள்ளைகளுக்கென காணிக்கைகளை சேகரித்து வைத்திருப்பீர்கள் என்று விசுவாசிக்கிறோம். இந்தக் காணிக்கையை ஆதிவாசிப் பிள்ளைகளின் கிறிஸ்துமஸ் தேவைகளுக்காகக் கொடுப்பீர்கள் என்று நம்புகிறோம். அதோடு பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காக அனுதினமும் ஜெபிக்கும்படி கேட்டுக் கொள்கிறோம். நாங்கள் உங்களுக்காகவும், உங்களுடைய குடும்பத்திற்காகவும் அனுதினமும் ஜெபிக்கிறோம். நீங்கள் பீல் ஆதிவாசிப் பிள்ளைகளுக்காகக் கொடுக்கும் தொகையை எங்கள் ஊழியர் அல்லது பிரதிநிதிகள் மூலமாகக் கொடுக்கலாம். அல்லது எங்களது தலைமை அலுவலகத்திற்கு நேரில் வந்தும் கொடுக்கலாம். அல்லது உண்டியலைத் திறந்து எடுத்து **M.O / D.D / Cheque** மூலமாக **SHALOM CHARITY MISSION** என்ற பெயருக்கு தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு உங்களின் தெளிவான முகவரியுடன், உண்டியலின் எண்ணையும் எழுதி அனுப்ப மிக அன்போடு கேட்கிறோம். நீங்கள் உண்டியலைத் திறக்க உங்களுக்கு சாவி **(Key)** வேண்டுமானால் **9698944522** என்ற செல் நம்பருக்குத் தொடர்பு கொள்ளுங்கள். நாங்கள் உங்களுக்கு சாவியை **(Key)** அனுப்பி வைக்கிறோம். கடந்த வருடத்தில் (2015) உண்டியல் காணிக்கை அதிகமாக கொடுத்தவர்கள்




| | |
|---|---|
| திருமதி. **ரெட்லின் சுதா** | ரூ. 7,300/- |
| மாஸ்டர் **ஜேப்னி** | ரூ. 7,220/- |
| மாஸ்டர்.**காலேப் பால்** | ரூ.5,000/- |

தாங்களும் பீல் ஆதிவாசி பிள்ளைகளுக்காக காணிக்கைகளை கொடுத்து கர்த்தரிடத்தில் இருந்து ஆசீர்வாதத்தை பெற்றுக்கொள்வோமாக.

## அறிவிப்பு

நமது ஷாலோம் ஊழியத்தில் தூத்துக்குடி முன்னேற்றப் பணியாளராக ஊழியம் செய்து வந்த சகோ.**ஆலன் எல்விஸ்** அவர்கள் செப்டம்பர் 2016 முதல் நமது ஷாலோம் ஊழியத்திலிருந்து தானாகவே விலகிக்கொண்டார்கள் என்பதை உங்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம். சகோதரருக்காக



# மிஷனெரி வாழ்க்கை வரலாறு

## இந்திய அப்போஸ்தலின் சாது சுந்தர்சிங்

### அடிச்சுவடுகளை பின்பற்றும் இரத்தக்கால்கள்

1 பேதுரு 1:18-25

மென்மையான ஆடையினுடே பனிக்குளிரானது பாய்ந்து கொண்டிருந்தது. கற்களும் முட்களும் அவரது கால்களைக் கிழித்துக் கொண்டிருந்தன என்றாலும் பனியால் மூடிய மலைகள் மீது அவர் நடந்து கொண்டே இருந்தார். அவருடைய இரத்தம் கசியும் பாதங்கள் அவருக்கு பின்னால் வெண்மையான பனியின் மீது அடிச்சுவட்டை ஏற்படுத்திக் கொண்டிருந்தன. ஓரிடத்தில் அவர் உட்கார்ந்து தன் கால்களின் புண்களைக் கட்ட ஆரம்பித்தார். அவ்வழியே அவருக்குப் பின்னாக வந்த ஒருவர் அவரைப் பார்த்து ஐயா எப்படி இருக்கிறீர்கள் என கேட்க என்னுடைய அருமை இரட்சகராம் இயேசு கிறிஸ்துவில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறேன் என்று பதிலளித்தார். பின்னும் ஏன் நீங்கள் இரத்தம் கசியும் வெறும் கால்களால் மலை மீது இவ்விதமாக பயணம் செய்ய வேண்டும் என்று கேட்க கல்வாரி சிலுவையில் தம் கால்களில் இரத்தம் சிந்தின அவரை மக்களுக்குக் காண்பிப்பதற்காக இவ்விதமாகச் செய்கிறேன் என்று பதிலளித்தவர் துன்பப்படுவதற்கான அழைப்பு பெற்ற சீக்கிய இளைஞர் சுந்தர்சிங்.

நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையும் குறித்து மேன்மை பாராட்டாதிருப்பேனாக அவரால் உலகம் எனக்கு சிலுவையிலறையுண்டிருக்கின்றன (கலா.6:14) என்ற வசனத்தைத் தன்னுடைய வாழ்க்கையின் குறிக்கோளாக அவர் ஏற்றுக் கொண்டார். என் மீது உள்ள அன்பினாலே இயேசு கிறிஸ்து தம்மைத் தியாகம் பண்ணினார். அதை போலவே நானும் இயேசு கிறிஸ்துவின் மேல் உள்ள என்னுடைய அன்பினால் என்னைத் தியாகம் செய்ய வேண்டும் என்று அவர் அடிக்கடி கூறுவது உண்டு.

கிறிஸ்துவின் நிமித்தம் பெற்றோரால் உறவினரால் வெறுக்கப்பட்டு தள்ளப்பட்ட சாது சுந்தர்சிங் தனது எஜமானாகிய கிறிஸ்துவுக்காக பட்டினி குளிர் சுகவீனம் மற்றும் சிறைவாசத்தையும் கூட அனுபவித்து விட்டார். தனது எஜமானின் அன்பைக் கேட்டிராத மக்களுக்கு அதனை அறிவிக்கும்படி அவர் பஞ்சாப் ஆப்கானிஸ்தானம் நேபாளம் தீபெத் ஆகிய இடங்களுக்கு மலைகள் காடுகள் வழியாகத் தன்னந்தனியாகப் பிரயாணம் செய்தார். பலவேளைகளில் பகை எதிர்ப்பு இவற்றைச் சந்தித்ததுண்டு. பசியோடு விரட்டப்பட்ட நிலமையில் அவர் காடுகளுக்கு உள்ளாகச் சென்று அங்கே தங்குவதும் உண்டு. குளிர்ந்த காற்றிற்கும் மழைக்கும் தன்னை தப்புவிப்பதற்காக காடுகளிலே உள்ள குகைகளிலே அவர் தங்குவது உண்டு. ஒரு நாள் காலையில் ஒரு சிறுத்தை தான் தங்கியிருந்த குகையில் தனக்கு சமீபத்தில் உறங்கி கொண்டிருப்பதைப் பார்த்தார்.

## தீபெத்

கிறிஸ்துவையே கேட்டிராத கடினமான அபாயம் நிறைந்த இடங்களுக்கெல்லாம் சுந்தர் தீர்மானத்துடனும் தைரியத்துடனும் சென்றார். அவருடைய இதயமும் எண்ணமும் தீபெத்தின் மேல்தான் அதிகமாக இருந்தது. பேய்களுக்கு பயப்படுவதிலும் பில்லி சூனியங்கள் செய்வதிலும் பல மூடநம்பிக்கையிலும் தீபெத் மூழ்கியிருந்தது. பலமுறை தீபெத் நாட்டிற்குச் சென்றார்.

ஒருமுறை அவர் ஒரு சிறு பட்டணத்தில் ஆண்டவரைப் பற்றிச் சொல்லிக் கொண்டிருந்த போது வெளிநாட்டு மார்க்கத்தை இங்கு பிரசங்கித்ததற்காக அவர் குற்றம் சாட்டப்பட்டு கைதியாக்கப்பட்டார். அவருடைய ஆடைகளை உரிந்து விட்டு அவரை ஆழமான தண்ணீர் அற்ற கிணற்றில் தள்ளி மேல்புறத்தை மூடி பூட்டி விட்டார்கள். இதற்கு முன்னால் இவ்விதமாகப் பலர் அந்த கிணற்றிலே தள்ளப்பட்டிருந்தனர். சுந்தர் கிணற்றினுள் கிடந்த எலும்பு குவியல் மற்றும் அழுகிக்கிடந்த சடலங்கள் இவற்றின் மேல் விழுந்தார். இப்பாழ்குழிக்குள் விழுந்த போது அவர் கை காயப்பட்டதினாலும் குழியிலே இருந்த துர்நாற்றத்தினாலும் அவர் அதிகமாக வேதனைப்பட்டார்.

## நேபாளம்


நற்செய்தி பிரசங்கிக்கப்படுவதற்குத் தடைவிதிக்கப்பட்டிருந்த நேபாளத்திற்கு சென்று கிறிஸ்துவைப் பிரசங்கித்த இவர் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். சிறைசாலையில் இருந்த மற்ற கைதிகளுக்கு கிறிஸ்துவைப் பற்றிக் கூறுவதிலேயே தம் நேரத்தைப் போக்கவே அவரைத் தனியாக ஒரு சிறிய அறையில் அடைத்து விட்டார்கள். அது ஒரு மாட்டுக்கொட்டையாக இருந்தது. அவரது ஆடைகள் கழற்றி கைகளையும் கால்களையும் ஒரு கம்பத்தில் கட்டி அவர் மீது அட்டைகளை விட்டுவிட்டார்கள். அவை அவருடைய இரத்தத்தை உறிஞ்சியது. பலம் குன்றிப் போனார் என்றாலும் வேதனையிலும் கடவுளிடம் ஜெபிக்கவும் அவரைத் துதிக்கவும் ஆரம்பித்தார்.

இவர் பட்டப்பாடுகளும் அவரது ஒப்பற்ற அனுபவங்களும் விரைவில் வெளி உலகின் கவனத்திற்கு வந்தது. உலகின் பல பாகங்களில் உள்ள கிறிஸ்துவ மக்களின் சிந்தனை இந்த இந்திய அப்போஸ்தலன் மீது பதிய ஆரம்பித்தது.

## வெளிநாடு

இவரது மிஷனெரி அறைகூவல்கள் அநேகரை ஜெபிப்பதற்கும் செயல்படுவதற்கும் தூண்டிவிட்டது. சிலோன் பர்மா மலேயா சீனா ஜப்பான் ஆகிய நாடுகளுக்குச் சென்று பிரசங்கித்தார். மேலும் இங்கிலாந்து அமெரிக்கா ஆஸ்திரேலியா இன்னும் ஒரு சில ஐரோப்பிய நாடுகளுக்கும் சென்று நற்செய்தி வழங்கினார். அவர் எங்கெங்கே சென்றாரோ அங்கெல்லாம் அவரில் இயேசு கிறிஸ்துவின் சாயலை மக்கள் கவனித்தார்கள். ஒருமுறை அவர் பேசிக் கொண்டிருந்த கூட்டத்தில் ஒரு சிறுமி இவர் இயேசு கிறிஸ்துவா? என்று கேட்டாளாம்.

இறுதி மரணங்களைக் குறித்த விபரங்களை நாம் அறிய முடியாத நிலை இருப்பதும் தமது குறுகிய கால வாழ்க்கையிலும் கிறிஸ்துவுக்காய் தன்னை முழுவதுமாக அர்ப்பணித்தவருடைய பணியை மறக்க முடியாது. மறக்கவும் கூடாது. அனைத்து மக்களிடமும் நற்செய்தியைப் பகிர்ந்து கொள்ளும் பணியை இந்த கி.பி.2020ம் ஆண்டில் தீவிரப்படுத்த முயற்சி மேற்கொள்ளுவோம்.



# ஷாலோம்

## வேத வினாப் போட்டி 35

(2 சாமுவேல், 1 இராஜாக்கள் புத்தகங்களிலிருந்து விடை காணவும்)

1. அமஞ்சி ஆட்கள் மேல் விசாரிப்புக்காரனாய் இருந்தது யார்?
2. சாலொமோனின் பாட்டுகள் எத்தனை?
3. சாலொமோன் ராஜாவிடத்தில் நியாயம் கேட்டு வந்த இரண்டு ஸ்திரிகள் பெற்றெடுத்த பிள்ளைகளின் வயதின் வித்தியாசம் என்ன?
4. இஸ்போசேத்தை படுக்கையில் கொன்று போட்டது யார்?
5. நான் கேட்டது நல்ல வார்த்தை என்று சொன்னது யார்?
6. எலியாவிற்கு மெல்லிய சத்தம் எப்போது உண்டாயிற்று?
7. மரம் வெட்ட நன்கு அறிந்தவர்கள் யார்?
8. சீரியரை இருப்புக் கொம்புகளால் முட்டி நிர்மூலமாக்கிப் போடுகிறவர் யார்?
9. எங்களுக்கு தாவீதிடத்தில் பங்குமில்லை சுதந்திரமும் இல்லை என்று சொன்னது யார்?
10. சாலொமோன் கட்டிய ஆலயத்திற்கு எப்பொழுது அஸ்திபாரம் போடப்பட்டது?

### வேதவினாப் போட்டியில் பங்குபெறும் வாசகர்களுக்கான நிபந்தனைகள்

1. விடைகள் யாவும் தகுந்த வேத ஆதாரத்துடன் இருக்க வேண்டும்.
2. கேள்வி எண்ணைக் குறிப்பிட்டு பதில் களை மட்டும் தெளிவாக எழுதினால் போதும்
3. பரிசு பெறுபவர் ஒன்றுக்கு மேற்பட்டவராக இருப்பின் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்படுவர்.
4. விடைகளை எழுதும் போது தவறாமல் உங்கள் விலாசம், போன் நம்பர் போன்றவற்றையும் சேர்த்து எழுதவும்.
5. பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் : 17.10.2016

### *கடந்த செப்டம்பர் மாத வேதவினா போட்டி எண் 34க்கான சரியான விடைகள்*

1. மூவாயிரம்-1 இராஜா. 4:32
2. கூஷியை - 2 சாமு. 18:20,21
3. அகிதோப்பேலின் - 2 சாமு. 15:31
4. அபியத்தாரின் குமாரன் யோனத்தானை - 1 இராஜா. 1:42
5. அதோனியா - 1 இராஜா. 1: 5,6
6. ஐசுவரியம், மகிமை - 1 இராஜா. 3:13
7. அபியத்தாரை - 1இராஜா. 2:26
8. இரண்டு காலும் முடமாயிருந்தது - 2 சாமு. 9:13
9. கீத்தியனாகிய ஓபேத் ஏதோமின் வீட்டில் - 2 சாமு. 6:11
10. யோவாபை பெனாயா அவன் மேல் விழுந்து கொன்று

**கடந்த செப்டம்பர் மாத வேத வினா போட்டி எண் 34இல் சரியான விடையினைத் தகுந்த நேரத்திற்குள் எழுதி அனுப்பிய நபர்களில் குலுக்கல் முறையில் தேர்வு செய்யப்பட்டு பரிசு பெற்றவர்கள்**

1. **Mrs. K.** ஷீபா தீனதயாளன், உப்பத்தூர் விருதுநகர் மாவட்டம்.
2. **Mrs.** ஹில்டா தேவராஜ், சென்னை.
3. **Mr.** அசோக் குமார், கச்சனாவிளை, தூத்துக்குடி மாவட்டம்.

### பதில்களை அனுப்ப வேண்டிய முகவரி

**SHARING LOVE MISSION**
New No.5A/323, Old. No.5/168.
Caldwell Colony, 3rd Street,
Tuticorin - 628 00.8. Tamil Nadu.
Phone : 0461 - 2375468

வாசகர்கள் தங்கள் பதில்களை
9345675468 - என்ற மொபைல் எண்ணிற்கு
SMS மூலமாகவோ What Appமூலமாகவோ
அனுப்பலாம் அல்லது
info@shalommission.in
என்ற ஈ-மெயிலும் அனுப்பலாம்.

WhatsApp

# ஜெபகுறிப்புகள்......

1. ஷாலோம் ஊழியத்தின் 25வது ஆண்டு வெள்ளிவிழா ஆண்டினைக் காணச்செய்த கர்த்தருக்கு நன்றி செலுத்தி, மேலும் ஷாலோம் ஊழியம் வளர்ந்து பெருகி 1 கோடி பீல் ஆதிவாசி மக்களும் இரட்சிக்கப்படவும், 7000 கிராமங்கள் சந்திக்கப்படவும், 7000 ஊழியர்களைத் தேவன் எழுப்பித் தரவும், 7000 சபைகள் கட்டப்படவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

2. வெள்ளிவிழா ஆண்டு சிறப்பு கட்டிடப் பணியான ஷாலோம் பவன்,(குஜராத்) அந்தர்வேலியாவில் ஷாலோம் பேராலயம் (மத்தியப்பிரதேசம்) மற்றும் ஷாலோம் மிஷன் பள்ளி மற்றும் விடுதி பிஜல்பூர் (இராஜஸ்தான்) இம்மாபெரும் மூன்று வெள்ளிவிழாத் திட்டங்களும் நிறைவேறவும் அதற்குத் தேவையான ரூ. 300 இலட்சங்கள் சந்திக்கப்படவும் நாம் கருத்தோடு ஜெபிப்போம்.

3. நம் பீல் சுதேச ஊழியர்களை கர்த்தர் இன்னும் அதிக வல்லமையோடு பயன்படுத்தவும், அவர்கள் மூலம் கர்த்தர் அநேக அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்யும்படியாகவும், அவர்கள் குடும்பத்தையும் பிள்ளை களையும் கண்மணிபோல பாதுகாத்துக் கொள்ளும்படியாகவும் நாம் விசுவாசத்தோடு ஜெபிப்போம்.

4. அநேக பீல் வாலிபர்களை தேவன் எழுப்பி அவர்கள் மூலமாக எல்லோரும் அதிசயிக்கும்படியான காரியங்களை தேவன் இந்த பீல் வாலிபர்கள் மூலம் செய்யும்படியாகவும், பீல் வாலிபப் பெண்கள் கர்த்தருக்காக வைராக்கியமாக எழும்பவும் நாம் ஜெபிப்போம்.

5. பீல் சிறுவர்கள் கர்த்தரே உண்மையான தேவன் என்பதை அறிந்துக் கொண்டு சிறுவர்கள் தங்கள் குடும்பத்தில் உள்ளவர்களுக்கு இயேசுவின் அன்பைக் கூறி சிறுவர்கள் மூலமாக பீல் மக்கள் இயேசுவை ஏற்றுக் கொள்ளும்படியாக

   சிறுவர்களை கர்த்தர் பயன்படுத்தும்படியாகவும், இவர்களுக்கு தேவன் விசேஷித்த ஞானத்தைக் கொடுத்து கல்வியில் சிறந்து விளங்கவும், நல்ல உயர்ந்த ஸ்தானத்திற்கு பிள்ளைகள் வரும்படியாகவும் கர்த்தரிடத்தில் ஜெபிப்போம்.

6. பீல் ஆதிவாசி பெண்கள் வல்லமையாய் எழும்பி மற்றவர்களையும் ஆதாயப்படுத்தக் கூடியவர்களாய் மாறவும், அவர்கள் கூடுகிற ஒவ்வொரு கூடுகையிலும் தேவன் அவர்களையும் பயன்படுத்தும்படியாக ஜெபிப்போம்.

7. பணித்தளத்தில் உள்ள அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், தலைமை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள் மற்றும் கிளை அலுவலகத்தில் பணிபுரியும் ஊழியர்கள், முன்னேற்றப் பணியாளர்கள், ஷாலோம் பிரதிநிதிகள் அனைவருக்காகவும், அவர்களுடைய குடும்பங்களுக்காகவும், அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் நாம் பாரத்தோடு ஜெபிப்போம்.

8. நம் ஷாலோம் ஊழியத்தின் ஆதரவாளர்கள் அனைவருக்காகவும், இந்த ஊழியத்தை தாங்குகிறதான சபை போதகர்கள், ஊழியக்காரர்கள், தொழிலதிபர்கள், வியாபாரிகள், பணிபுரிபவர்கள் அனைவருக்காகவும் அவர்களுடைய குடும்பங்களுக்காகவும் அவர்களுடைய பாதுகாவலுக்காகவும் நாம் கருத்தாய் ஜெபிப்போம்.

9. ஷாலோம் ஊழியம் மேலும் வளருவதற்கும், அநேக ஆலயங்கள் கட்டிக் கொடுப்பதற்கும், அநேக ஆதரவாளர்கள் எழும்பவும், ஜெபித்து தாங்குபவர்கள் எழும்பவும் நாம் ஜெபிப்போம்.

10. நம் பேராயர் வே.தேவதாஸ் அவர்களும் சகோதரி வஹிதா அவர்களும் தேவன் கொடுத்த தரிசனத்தின்படி அவர்கள் செய்து முடிக்க தேவன் அவர்களுக்கு நல்ல சுக, பெலன், ஆரோக்கியத்தைக் கொடுக்கும் படியாகவும், ஒவ்வொரு நாளும் அவர்களை தேவன் வல்லமையாகப் பயன்படுத்தவும், அவர்களுடைய பிள்ளைகள் டைட்டஸ் - மெர்லின், Zion Kryston, அவர்களுடைய ஊழியங்களுக்காகவும், சகோ. ஷாலோம் M.A. (Media) பயின்று வரும் அவர்களை தேவன் ஆசீர்வதிக்கவும், சகோதரி ஷெக்கினா அவர்கள் தங்கள் மருத்துவ படிப்பை முடித்து பணித்தளத்திற்கு வந்திருக்கிற அவர்களுக்காகவும், தேவன் இந்த குடும்பம் முழுவதையும் பாதுகாத்து அவருடைய ஊழியத்தில் அபரிவிதமாக பயன்படுத்துமாறும் நாம் அனைவரும் சூ இணைந்து ஜெபிப்போம்.

**மாத பத்திரிக்கை சந்தா...**

ஷாலோம் மிஷனெரி ஊழியத்தின் மூலம் வெளியிடும் இந்த பத்திரிக்கைக்கான ஆண்டு சந்தா ரூ.100 செலுத்தி புதுப்பித்துக் கொள்ள தங்களை அன்போடு ஞாபகப்படுத்திக்கொள்கிறோம்

ஜெப-துதி மொழி

*துதி இருக்கிற இடத்தில் கர்த்தரும் கர்த்தர் இருக்கிற இடத்தில் துதியும் இருக்கும்.*
*ஜெபம் என்பது பரம தகப்பனுடைய பொக்கிஷ சாலையை திறக்கும் திறவுகோல்*

## அக்டோபர் மாத ஷாலோம் ஜெபங்கள்

| நாள் | நேரம் | இடம் | தேவசெய்தி மற்றும் தொடர்புக்கு |
|---|---|---|---|
| 01.10.2016<br>(சனிக்கிழமை) | காலை 9.15 முதல்<br>1.00 மணி | அன்பு பகிர்வு இயக்கம் தலைமை அலுவலகம்<br>No. 5A/323, கால்டுவெல் காலனி 3வது தெரு,<br>**தூத்துக்குடி**-628 008. | **Prof.C.S. கிறிஸ்டோபர்,**<br>பாளையங்கோட்டை |
| 08.10.2016<br>**சனிக்கிழமை** | மாலை 5.00<br>மணிக்கு | M.T.N பில்டிங்<br>(மகளிர் காவல் நிலையம் அருகில்)<br>வடக்குத் தெரு, **மார்த்தாண்டம்** | சகோ. **செல்வதுரை,**<br>செல் : 9487689869 |
| 08.10.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | உபவாச ஜெபம் தலைமை அலுவலகம்<br>**தூத்துக்குடி** | சகோ. **சாம் குணசீலன்,**<br>செல் : 9345675468 |
| 10.10.2016<br>திங்கள்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | ஷாலோம் பெண்கள் ஜெபக் கூடுகை<br>தலைமை அலுவலகம், **தூத்துக்குடி** | செல் : 9688744522 |
| 15.10.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | எபனேசர் பிளாசா, பரமா தெரு ஜங்சன்,<br>**நாகர்கோவில்.** | சகோ. **ராபின்சன்**<br>செல் : 9688144522 |
| 15.10.2016<br>சனிக்கிழமை | காலை 10.00மணி<br>முதல் 1.00 வரை | எஸ்தர் பெண்கள் ஜெபக்குழு கூட்டம்<br>தலைமை அலுவலகம், **தூத்துக்குடி** | செல் : 9688744522 |
| 15.10.2016<br>சனிக்கிழமை | மாலை 5.30 மணி<br>முதல்9.00மணிவரை | அற்புதராஜ் மெட்ரிக்குலேஷன் பள்ளி<br>நுங்கம்பாக்கம் இரயில் நிலையம் அருகில், **சென்னை** | **சகோ.ஜான் ஜெயசிங்,**<br>செல் : 96982 44577 |
| 22.10.2016<br>சனிக்கிழமை | காலை 12.00 மணி<br>முதல்12.00மணிவரை | ஷாலோம் சங்கிலி தொடர் ஜெபம்<br>தலைமை அலுவலகம் | செல் : 9688744522 |

## அக்டோபர் மாத ஷாலோம் முன்னேற்றப் பணி கூட்டங்கள்
## மிஷனெரி பிரதிஷ்டை ஆராதனைகள்



**கோவை சி.எஸ்.ஐ கிறிஸ்து ஆலயம்**
(02.10.2016) ஞாயிற்றுக் கிழமை மாலை ஆராதனை
பிரதிஷ்டை செய்யப்படும் ஊழியர்கள்
1. சகோ. **பர்த்து ஆர். டின்டோர்**
   கிராமம் போர்குண்டா இராஜஸ்தான்
2. சகோ. **சஞ்சய் ஆர். ராட்டுவா**
   கிராமம் தேவ்காட் குஜராத்
   தொடர்புக்கு. சகோ. **வினோத்** 9698144522

**பயணம் சி.எஸ்.ஐ ஆலயம், கன்னியாகுமரி மாவட்டம்**
(09.10.2016) ஞாயிற்று கிழமை காலை ஆராதனை 9 மணி
பிரதிஷ்டை செய்யப்படும் ஊழியர்கள்
1. சகோ. **சகன் காமோல்**
   கிராமம் வாங்காட் குஜராத்
   தொடர்புக்கு. சகோ.**செல்வம்** 9487689869

**MUF மதுரை, திருப்பாலை**
(14.10.2016) வெள்ளி கிழமை உபவாச ஜெபம் காலை 10 மணி
பிரதிஷ்டை செய்யப்படும் ஊழியர்கள்
1. சகோ. **மோகன்.பி.காட்** கிராமம் புச்சியாவாடா இராஜஸ்தான்
   தொடர்புக்கு. சகோ.சந்திரபால் 9698644522

**புத்தளம் லூத்திரன் ஆலயம், கன்னியாகுமரி மாவட்டம்**
(30.10.2016) ஞாயிற்று கிழமை **காலை ஆராதனை** 9 மணி
பிரதிஷ்டை செய்யப்படும் ஊழியர்கள்
1. சகோ. **மடியா பாரியா**
   கிராமம் கேடி 3 மத்தியப்பிரதேசம்
   தொடர்புக்கு. சகோ.**ராபின்சன்** 9688144522



**முழு இரவு ஜெபம், திருநெல்வேலி**
(07.10.2016) வெள்ளி கிழமை
இரவு 9 மணி முதல் இரவு 12 மணி வரை
தொடர்புக்கு. சகோ.டேவிட் 9698844599

**தாமரைக்குளம் சி.எஸ்.ஐ ஆலயம், கன்னியாகுமரி மாவட்டம்**
(09.10.2016) ஞாயிற்று கிழமை காலை ஆராதனை 9 மணி
தொடர்புக்கு. சகோ.**ராபின்சன்** 9688144522

**தேவ பிள்ளைகள் அனைவரும் குடும்பமாய் கலந்துக் கொண்டு ஷாலோம் ஊழியங்களுக்காகவும், இந்தியத் தேசத்திற்காகவும் ஜெபித்து தேவனுடைய ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொள்ள அன்பாய் அழைக்கிறோம்.**

## காணிக்கைகளை அனுப்பும் வழிகள்

- தூத்துக்குடியில் உள்ள ஷாலோம் ஆதரவாளர்கள் நேரடியாக வர முடிந்த வர்கள் உங்கள் காணிக்கையை தூத்துக் குடி தலைமை அலுவலகத்திற்கு வந்துக் கொடுத்து ஜெபித்து ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- உங்கள் பகுதியில் ஷாலோம் பிரதிநிதிகள் அல்லது ஷாலோம் ஊழியர்கள் இருந்தால் அவர்களிடம் காணிக்கையைக் கொடுத்து இரசீதைப் பெற்றுக் கொள்ளுங்கள்.
- காணிக்கைகளை E.M.O. மூலம் தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு கிளை : சிதம்பரநகர் என்று அனுப்பலாம். அப்படி அனுப்பும் போது உங்களின் தெளிவான முகவரியைக் கொடுக்கும்படி தயவாய் கேட்டுக் கொள் கிறோம்.
- SHARING LOVE MISSION என்ற பெயருக்கு D.D. அல்லது Cheque எடுத்து தூத்துக்குடி தலைமை அலுவலகத்திற்கு பதிவு தபால் அல்லது கொரியர் மூலமாக உங்கள் காணிக்கைகளை அனுப்பலாம்.
- உங்களது வங்கிக் கணக்கிலிருந்து, Net Transfer மூலமாகவும் காணிக்கை களை கீழ்க்கண்ட எங்களது வங்கிக் கணக்குகளுக்கு அனுப்பலாம்.
- நீங்கள் வசிக்கும் ஊர்களில் கீழ்க்கண்ட வங்கிகளில் எங்கள் கணக்குகளில் Cash (or) Cheque (or) D.D. மூலம் Deposit பண்ணலாம்.
- எங்களது ஷாலோம் கிளை அலுவலகங்களுக்கு நேரடியாக வந்தும் காணிக்கைகளைக் கொடுத்து ஜெபித்துச் செல்லலாம்.

---

வங்கிக் கணக்கின் பெயர் : **Sharing Love Mission**

Branch : Tuticorin. கிளை : தூத்துக்குடி

---

**Tamilnad Mercantile Bank**
**A/c. No. : 106100710400009 (I F S Code : TMBL0000106)**

---

[redacted]

**A/c. No. : 105010100094373**
**(IFS Code : UTIB0000105)**

---

நீங்கள் ஷாலோம் ஊழியங்களுக்கு வங்கிக் கணக்குகளில் Cash (or) Cheque (or) D.D. மூலமாகவோ அல்லது Net Transfer மூலமாகவோ காணிக்கை செலுத்தினால், உடனடியாக அந்தத் தகவலை எங்களுக்குத் தெரியப்படுத்த அன்பாய்க் கேட்கிறோம். அப்படி தெரியப்படுத்தாத பட்சத்தில் எங்களுக்கு யார் காணிக்கை அனுப்பியது என்று தெரியாமல் போய்விட வாய்ப்பு உள்ளது. ஆகவே ஆதரவாளர்கள் உடனடியாக எங்களோடு தொடர்பு கொண்டு தாங்கள் கா ணிக்கை செலுத்திய விபரத்தினை e-mail, Phone, SMS, Whats app மூலமாக எங்க

## உங்கள் ஜெப உதவிக்கு ஷாலோம் கிளை அலுவலகங்களின் முகவரிகள்

**HEAD OFFICE** **SHARING LOVE MISSION, Bro. Sam Gunaseelan**

No. 5A/323,-3rd Street, Caldwell Colony, TUTICORIN-628008
Ph. : 2377737, 2375468, Cell : 9345675468

**CHENNAI BRANCH OFFICE**

**Bro. John Jeyasingh** No.102-2nd Main Road Sathya Nagar, Padi, CHENNAI - 600050,Cell : 9698244577

**NAGERCOIL BRANCH OFFICE** **Bro. Robinson. S.**

Ebenezer Plaza, Parama Street, WCC Junction,Nagercoil - 629001
Cell : 9688144522, 9698444522

**MARTHANDAM BRANCH OFFICE** **Bro. Selvadurai.G**

M.T.N. Building, North Street, Near Women's Police Station, Marthandam, K.K. Dist. - 629165, Cell : 9487689869, 9659644500

**MADURAI BRANCH OFFICE** **Bro. Chandra Paul. S**

6/3, Nellaiappar Puram 7th Street,Tirunagar (p.o)
MADURAI-625006, Cell : 9698644522

**TIRUNELVELI BRANCH OFFICE** **Bro. David. R**

56 A/4,-C.S.I Church South Street, (Upstairs) STC road, Perumalpuram, Palayamkottai TIRUNELVELI-627007, Cell 9698844599

**MUMBAI BRANCH OFFICE** **Bro. Jacob. N.**

Bathani Bhavan, Room No. 11, First Floor, R. No. 2, Gate No. 6, Malvani, Malad West, Mumbai - 400095,Cell : 09819554974

**COIMBATORE BRANCH OFFICE** **Mr.Yardli Vinodh.J**

No: 31 LakshumiGarden, Palaya Pudur, Periyanayakkan palayam, Coimbatore -641020, Cell : 9698144522

**குழந்தை ஆதரவுத் தொகை மற்றும் சமுதாயப்பணி காணிக்கைகளை அனுப்ப...**

Shalom CHARITY MISSION

**SHALOM CHARITY MISSION**
Branch : Tuticorin,

AXIS BANK
Branch : Tuticorin,
**105010100096779 -**
(IFS Code : UTIB0000105)

TMB
**Tamilnad Mercantile Bank**
**174100710400061**
(IFS Code : TMBL0000174)
**Branch : Tiruchendur Road**

# நாட்டு நடப்புச் செய்திகள்

**ரோபோ கைகள் செய்த உலகின் முதல் கண் அறுவை சிகிச்சை**

ரோபோவின் உதவியுடன் மிக மிக நுணுக்கமான கண் அறுவை சிகிச்சை ஒன்று பிரிட்டனில் செய்யப்பட்டுள்ளது. ஆக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழகத்தின் ஜான்ராட்கிளிஃப் மருத்துவமனையில் ரோபோவின் உதவியுடன் ஒரு மில்லிமீட்டரில் நூறில் ஒரு பங்கு கனமே இருந்த சவ்வுப்படலத்தை கண்ணில் இருந்து மருத்துவர்கள் வெற்றிகரமாக நீக்கியுள்ளனர்.

வளர்ந்து வரும் நாடுகளில் விழித்திரையில் ஏற்படும் நோய்களே பார்வை இழப்புக்கு முக்கியக்காரணமாக உள்ளது. னவே இனிவரும் காலங்களில் இந்த இயந்திரக் கைகள் பலரின் பார்வையை காப்பாற்றலாம் என மருத்துவர்கள் நம்புகின்றனர். - BBC Tamil 12 Sep. -2016

**குறுங்கோளில் கல்லெடுக்கச் செல்லும் நாசா விண்கலம்**

Asteroid எனப்படும் குறுங்கோளுக்கு சென்று திரும்பும் விண்கலன் ஒன்றை வானில் ஏவியுள்ளது நாசா.

நூறுகோடி டாலர் செலவில் அனுப்பப்பட்டிருக்கும் ஆசிரிஸ் ரெக்ஸ் விண்கலனின் நோக்கம் குறுங்கோளின் கல் ஒன்றை எடுத்துக் கொண்டு பூமிக்கு திரும்புவது

இந்த விண்கலன் கொண்டு வரக்கூடிய அந்த குறுங்கோளின் கல் சூரிய குடும்ப கிரகங்கள் எப்படி உருவாயின என்பதை அறிய உதவும் என்று விஞ்ஞானிகள் நம்புகிறார்கள்.

**மூளையை பாதிக்கும் வாகனப்புகை புதிய ஆய்வு எச்சரிக்கை**

வாகன புகையால் மூச்சுத்திணறல் இதய நோய் அகால மரணம் போன்றவை ஏற்படும் என்பது நன்கு தெரிந்த செய்தி. தற்போதைய இந்த புதிய ஆய்வு வாகனப்புகை மூளைக்குள் சென்று பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்று கவலையளிக்கும் சாத்தியத்தை கண்டுபிடித்திருக்கிறது.


**கீழ்கண்ட விலாசத்தில் எங்களுடன் தொடர்பு கொள்ளவும்**

**தலைமை அலுவலகம்**

**SHARING LOVE MISSION**
. 5A/323, Caldwell Colony,
3rd Street, Tuticorin - 628 008.
Tamil Nadu.
Phone : 0461-2375468, 2377737
Cell : 9345675468

**பணித்தள அலுவலகம்**

**Rt. Rev. Dr. V. DEVADASS**
Founder & General Secretary
Sharing Love Mission
Christian Kamdar Society,
Dahod - 389 151, Gujarat
Phone : 07043334501
Cell : 09377445468

**email : info@shalommission.in Website : www.shalommission.in**

ஜெபியுங்கள்! ஜெபியுங்கள்!

...தம்முடைய ஊழியக்காரரை அக்கினிஜுவாலைகளாகவும் செய்கிறார். சங். 104 : 4

# ஷாலோம் சுதேச ஊழியர்

# குடும்ப எழுப்புதல் தரிசன முகாம் - 2016

## வெள்ளி விழா ஆண்டு நிறைவு சிறப்பு கூடுகை

இடம்
SPIRITUAL LIFE CENTRE
பரூச், குஜராத்

நாள்
2016 அக்டோபர்
18 முதல் 21 வரை



பாடல் & ஆராதனை Pr. டேனியல்ராஜ் மும்பை

வல்லமையின் செய்தி :

**Bro. மோகன் சி லாசரஸ்**
(இயேசு விடுவிக்கிறார், நாலுமாவடி)

**Bishop Rt. Rev. Dhayanadhan**
**Angelican Bishop.**
**Rt.Rev. Dr. John Sathiya Kumar**

**Rt. Rev. Dr. V. தேவதாஸ்** (பேராயர், ஷாலோம் திருமண்டலம்)
சகோதரி. **வஹிதா தேவதாஸ்** (அன்பு பகிர்வு இயக்கம்)
**மற்றும் இயேசு விடுவிக்கிறார் குழுவினர் & சிறப்பு விருந்தினர்**



Registered with the Registrar of News Paper in India
Under No. TNTAM/2004/16449. Postal Regn. No. : TTN/07/2015-2017.
TN/WPP-95/SR/2015-2017, Date of Publication : 25th of every month.
Posted at Chidambaranagar P.O. 628008 on 25th & 28th of every month

# பீல் ஆதிவாசி மாணவர் பராமரிப்புத் திட்டம்

## BLESS A CHILD PROJECT



| | |
|---|---|
| தகப்பனார் பெயர் | : தோலியா பார்கி |
| தாயார் பெயர் | : மங்கலி பார்கி |
| படிக்கும் வகுப்பு | : 3rd Std |
| பிறந்த நாள் | : 14.01.2006 |
| சொந்த ஊரின் பெயர் | : நாங்கன்கேடி |
| தாலுகா | : மேக்நகர் |
| மாவட்டம் | : ஜாபுவா |

**மாணவரின் பெற்றோரைப் பற்றி சில வரிகள் :**

இவனுடைய தகப்பனார் இயேசுவை அறியாததற்கு முன் சாராயம், பீடி, தம்பாக்கு, சண்டை போடுவது போன்ற பாவங்களுக்கு அடிமையாக வாழ்ந்து வந்தார். இவனுடைய தாத்தா 11 வருடங்களாக வியாதிப்படுக்கையில் இருந்தார். சுகத்திற்காக எவ்வளவோ மந்திரம் மற்றும் மருத்துவம் பார்த்தும் பலனில்லை. இவருடைய மாமா இயேசுவைப் பற்றிக் கூறினார். பின்பு இயேசுவை விசுவாசித்து சபைக்கு சென்றார். அங்கு ஊழியர் தாத்தாவிற்காக ஜெபித்த போது, சுகம் கிடைத்தது. அதினிமித்தம் குடும்பமாக இயேசுவை சொந்த இரட்சகராக ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து அந்தர்வேலியா சபைக்குச் சென்று ஆவிக்குரிய வாழ்வில் வளர்ந்தார். பின்பு ஊழியம் செய்ய வேண்டுமென்ற பாரம் ஏற்பட்டு, தன்னை அர்ப்பணித்து, ஷாலோம் ஊழியத்தில் இணைந்து, 1 மாத ஊழியப் பயிற்சி பெற்று, பின்பு தனது சொந்த கிராமத்தில் ஊழியம் செய்து வருகிறார்.

**திறமை, தாலந்து மற்றும் வாஞ்சை :**

விஷ்வாஸ் நன்றாக படிப்பான். விளையாட்டில் ஆர்வமுண்டு. நன்றாக வேதம் வாசிப்பான், ஜெபிப்பான். இவனுக்கு 1 சகோதரனும் 2 சகோதரியும் உண்டு.

**ஜெபியுங்கள் :** இவனுக்காக, இவனுடைய படிப்பிற்காக, நல்ல சரீர சுகத்திற்காக, பெற்றோர் செய்கிற ஊழியத்திற்காக ஜெபித்துக்கொள்ளுங்கள்.

**Sponsor's Name : Mrs.Anandi Kumar, Chennai.**

**ஜெபித்து தாங்க முன் வாருங்கள்**

பிரியமானவர்களே நீங்களும் ஜெபித்து மாதம் ரூ.700 கொடுத்து பீல்ஆதிவாசி மாணவரைத் தாங்க முன்வரலாம். *Shalom Charity Mission*என்ற பெயரில் இதற்கான காணிக்கைகளை *D.D.*அல்லது மூலமாக அனுப்ப அன்பாய் கேட்கிறோம் உங்கள் நண்பர்கள் மற்றும் உறவினர்களையும் தாங்கும்படியாக தயவாய் அறிமுகப்படுத்தி வையுங்கள்

Owned and Published by V. Devadass from New No.5A/323, Old.No. 5/168,
Caldwell Colony, 3rd Street, Tuticorin - 628 008. and Printed by S. Joseph at Rajan Press,
59, Palayamkottai Road, Tuticorin-628 002. Editor : V. Devadass